தென்மொழி

நாடு நலம்பெறுதல் குதிரைக் கொம்பே!

ஏடாயி ரங்கோடி எழுதிக் குவித்தாலும்,
இடித்திடித்து உரைத்திட் டாலும்,
பூடாயி ரங்கோடி பிழிந்து,மருந் திட்டாலும்,
புத்தறிவு புகட்டி னாலும்,
கேடாயி ரங்கோடி கிளர்க்கின்ற செய்தித்தாள்-
கீழ்மை திரைப் படங்க ளாலே,
நாடாயி ரங்கோடி ஆண்டுகள் சென்றாலும்
நலம்பெறுதல் குதிரைக் கொம்பே!

சுவடி: ௬. ஓலை: ௧. துலாம் (ஐப்பசி) சககச



தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்

ரூ 0.50 காசு

-நமக்கு வந்த மடல்கள்-

☐ தமிழ்சால் புலவீர்! இந்த இருபதாம் நூற்றுண்டில் தமிழ் மறு மலர்ச்சி பெற்று வருகிறது என்று பலர் கூறுவது வெறும் பிதற்றல் தான் என்பது தங்கட்குத் தெரியாததன்று. தென்மொழி ஒன்றுதான் தமிழ்ப் பணியினை முழு அளவில் செய்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது; எனினும் தென்மொழியே எல்லாவகைப் பணிகளை யும் செய்து முடிக்கும் என்று எண்ணி நம் இப்பொழுதைய கடமை களைத் தட்டிக் கழித்துவிட முடியாது. தமிழுக்குத் தலைசிறந்த, கருத் தாணை பெற்ற அகரமுதலி இல்லாதது எத்துணை இழுக்கு! ஐயன்மீர்! தங்கள் கால்களில் விழுந்து இறைஞ்சுகின்றேன். பாவாணர் வழியாக மாபெரும் தனித்தமிழ் அகரமுதலி ஒன்று வெளியிட முயலுங்கள். பாவாணரிடம் சொல்லி அகரமுதலி ஆக்கும் பணியைத் தொடக்க வேண்டுகிறேன்.

இன்று அரசையே நம்பிப் பயனில்லது; அரசாள்வோர் தம் தமிழே தமிழென்றும், ஏனையர் பேசுவது தமிழ் அன்று என்றும் கூறுகின்ற முரண்பாட்டுக்காரர்கள். நல்ல தமிழறிஞர் முன்னணிக்கு வந்தால் தம் புகழ்க்கு ஊறு நேருமோ என்று ஐயுறும் தந்நலக்காரர். இவர்கள் நம் பாவாணரைப் பயன்படுத்த நாம் வேண்டுவோம்; அங்ஙனம் அவர் பயன்படுத்தாராயின் நாமே நம் கடமைகளை ஆற்றுதல் வேண்டும். தென்மொழி நூல் வெளியீட்டுக் கழக வழி நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம்! ஏராளம்! பாவாணர் நூல்கள் அனைத்தும் அச் சேறும் நாள் தொலைவில் இல்லை.

தாங்களோ தனியர்; பணவளம் அற்றவர். தமிழ்ப்பற்றையே பெருங் குவையாக மதித்து இடையருது உழைக்கும் பெருமான். நான் வேண்டுவது தங்கட்கு மலைப்பாகத் தோன்றலாம். ஆனல் ஒன்று; தமிழுக்குத் தோன்ருத் துணைவர் நிரம்ப இருக்கின்றனர். உங்கள் கோட்பாடுகளையும் விழுமிய உள்ளுணர்வுகளையும் தாங்கி நிற்கும் தமிழ் நெஞ்சங்கள் பல உள்ளன. நீங்கள் செய்துவிட்டுப் போகும் பணிகளைத் தொடர்ந்து கைக்கொள்ளும் தமிழ்ப் பற்றர்கள் பலர் இருக் கின்ருர்கள். எதிர் காலத்தில் நம்பிக்கை வையுங்கள்; தென்மொழி மன்றத்திலும் அம்பலத்திலும் ஏறப்போகும் நாள் தொலைவில் இல்லை. ஏற்ற காலத்தில் ஏற்ற இடத்தில் உங்கட்குத் துணை சேரும் என்பதை நெஞ்சில் நிறுத்துங்கள். என் வேண்டுகோளை வினைப்படுத்துவீர்கள் என்று நம்புகிறேன். தமிழ் மாணவன், தெப்பக்குளம், திருச்சி.

☐ பேரன்புகெழுமிய பெருந்தகையீர்! வணக்கம். தென்மொழியைத் தொடர்ந்து படித்தும், அதன் நற்செயல்களுக்கு நல்லூக்கம் கொடுத் தும் வருபவருள் யானும் ஒருவன். அதன் நற் செயல்களுக்கு என்றும் தமிழன்பர்களின் ஊக்கமும் – ஆக்கமும் இருந்துவரும்! தங்களின் ஆசிரியவுரை, பார்த்தாலும்–நினைத்தாலும்–படித்தாலும்–படிக்கப்பக்க நின்று கேட்டாலும்–பரிந்துணர்ந்தாலும், குருதி கொதிக்கும்; நரம் புகள் பின்னிப் பிணைந்து முறுக்கேறும்; கோழையும் தன் நினைவில்லா மல் மறவனுவான். இஃதை எவரும் மறுக்கவோ–மறைக்கவோ முடி

தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்.

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே.

சுவடி - 5 :: ஓலை - 9

துலாம் (ஐப்பசி) தி. பி. ௧௯௯௮ (1967-அக்டோபர்)

பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழியே!



திராவிடர் கழகத் தலைவர் பெரியார் வியப்பான ஓர் உணர்வு படைத்தவர். தமிழகத்தில் எவனாகிலும் ஒருவன் ஏதாவது ஒன்றைப் பிழையாகச் சொன்னால், அதற்குத் தன் தலையிலேயே ஒரு குட்டு வைத்துக்கொள்வார்; இல்லையானால் தனக்குப் பக்கத்தில் உள்ளவன் தலையிலாவது ஒரு குட்டு குட்டி விடுவார். எங்காவது காசியில் உள்ள பார்ப்பான் ஒருவன் ஏதாவது ஒன்று சுட்சுடச் சொல்லிவிட்டால், இவர் திருச்சியில் உள்ள பார்ப்பானைப் பிடித்துத் திட்டு திட்டென்று திட்டித் தீர்ப்பார். இப்படிப்பட்ட செயல்கள் ஒருசில சரியாக விருக்கும். பெரும்பாலான பொருளற்றிருக்கும்.

நம்மைப் பொறுத்த மட்டில் பெரியார் குமுகாயச் சீர்திருத்தத்தில்–பிரா மண–சூத்திரப் பெரும் போராட்டத்தில் பெரியார்தாம்! அதில் ஐய மில்லை. ஆனால் தமிழ் மொழி பற்றியோ, தமிழர் வரலாறு பற்றியோ, பிற அறிவியல் செய்திகளைப் பற்றியோ பேசுவதில் அவர் சிறியாரே. அவர் ஒரு முதியவர், தலைவர், சீர்திருத்தக்காரர் என்பதற்காக அவரை எவ்வளவு போற்றுகிறோமோ, அவ்வளவு, பிறதுறைகளில் தலையிட்டுக் கருத்தறிவிப்பதற்காக அவரைக் கண்டிக்கிறோம். இதுபற்றித் 'தென் மொழி' முன்பே ஆசிரியவுரையில் தன் கருத்தைக் கூறியுள்ளது. தமிழர்கள் இன்னொரு முறை அவர் பற்றிய அக்கட்டுரை [பெரியாரின் தமிழ் ஆராய்ச்சி]யை எடுத்துப் படித்து விட்டு இதனையும் படிக்க வேண்டுகின்றோம். 'தென்மொழியில் வந்த அக்கட்டுரைக்கு எவரோ தமிழ்ப் புலவர் ஒருவர் விடுதலையில் ஒருபக்கம் மறுப்புரை எழுதியிருந் தார். ஆனால் கட்டுரை ஏனோ முடிவுறாமல் இடை நின்றது. ஒரு வேளை பெரியாரோ. பிறரோ தலையிட்டு இடை நிறுத்தியிருக்கலாம். நாம் எவரிடமும் எதுபற்றியும் கருத்துப் போர் புரிந்து அளவை(வாது) இட என்றுமே அணியமாக உள்ளோம் என்பதைக், கட்டுரையை இடையில் நிறுத்திய அப்புலவர் உட்பட எல்லாருக்கும் அறிவித்துக் கொள்கிறோம்.

பெரியாரின் வெற்றி:

பெரியார் அண்மையில் "தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி" என்று எழுதியதைக் கண்டித்து மறுப்புரை எழுத வேண்டும் என்று கல்லூரி மாணவர், தமிழன்பர் பலரிடமிருந்தும் நமக்கு மடல்களும் கொதிப்புரைகளும் வந்தன. நாம் ஏற்கனவே பெரியாரைப் பற்றியும், அவர் தமிழ்மேல் கொண்ட பிழையான கருத்துப்பற்றியும், அவர் தமி ழறிவு பற்றியும் விளக்கக் கூறி அவர் கூற்றுகளைத் தமிழர் தங்களை, விழிக்கக் கூறிய கூற்றுகளாகக் கொள்ளுதல் வேண்டுமேயன்றிப் பழிக்கக் கூறிய கூற்றாகக் கொள்ளுதல் கூடாதென்று எச்சரித்திருந் தோம். ஆனால் தமிழர் இற்றை ஞான்று ஓரளவு விழிப்படைந்துள்ள தால், அவர் விளையாட்டுக்காக, அவருக்கே இயல்பான சொற்களால் கூறிய கூற்றைக்கூட, பொறுத்துக்கொள்ள இயலாதவராகி, அவர் மேல் பாய்ந்துள்ளார் என்றே கருதவேண்டி உள்ளது. தலைவர் தவறு செய்தாலும தாங்கள் இனித் தவறு செய்யோம் என்ற தன்னுணர் வைத் தமிழர் பெற்றுவிட்டதாகவே நாம் எண்ணி மகிழ்கின்றோம். இது தமிழர்க்கும் வெற்றி! தன்னுணர்வு வேண்டி இத்தனைக் காலம் பாடுபட்டு வரும பெரியாருக்கும் வெற்றி.

பிள்ளை காட்டுமிராண்டியானால் தந்தை...... ?

பெரியார் தமிழைப் பற்றி இப்படிக் கருத்துக் கூறுவது இன்று நேற்றன்று; கடந்த முப்பதாண்டுகளாகவே பெரியார் தமிழைக்'காட்டு மிராண்டி மொழி' என்றும் தமிழரைக் 'காட்டு மிராண்டிகள்' என்றும் கூறி வருகிறார். அவர்தவிர வேறு எவரேனும், பார்ப்பனரிலோ, பிற இனத்திலோ இப்படிக் கூறுவார்களானால் அதை முதன்முதல் கனன்று கண்டிப்பவர் பெரியாரே. தன் மகனை 'அடேய் முட்டாள்' என்று தந்தை கண்டிப்பது கண்டு, பிறரும் அவனை அவ்வாறு கூறினால் எந்தத் தந்தையும் பொறுத்துக் கொள்ளான் அன்றோ? அது போலவே பெரியாரும் தமக்குள்ள உரிமையால் அவ்வாறு கூறுவதாகவே நாம் கொள்ளுதல் வேண்டும். இனித் தந்தை அவ்வாறு கூறுவதையும் ஒரு மகன் பொறுத்துக் கொள்ள விரும்பாமல் இருக்கின்றான் எனில் நாம் என்ன கருத வேண்டும்? 'ஓ! ஓ! பிள்ளைக்குப் போதிய அறிவும் தன்மான உணர்வும் வந்து விட்டன' என்றுதானே கருதமுடியும். அப்படித்தான் தமிழர் இக்கால் பிள்ளைகளாகவும் பெரியார் தந்தையாகவும் உள்ளார். இனி, ஒரு தந்தை பார்த்துத் தன் பிள்ளையை "அடேய் காட்டுமிராண்டி" என்றால் என்ன பொருள். தந்தை அதைவிடக் காட்டு மிராண்டி என்றுதானே பொருள். இதையெல்லாம் எண்ணி நாம் பெரியார் பேச்சுக்குப் பொருள் கொண்டு, அவர் எதற்காக அவ்வாறு கூறுகிறார் என்று நினைத்தல் வேண்டும்.

காமராசும் அண்ணாத்துரையும் காட்டு மிராண்டிகளா ?

இனி, நாமும் பெரியாரும் இப்படி நல்லபடியாகப் பொருள் கொள்ளும் பொழுதில், அக்கம் பக்கத்தில் உள்ள நம்மினும் இழிந்த "காட்டு மிராண்டிகள்" நம் இருவரையும் பார்த்து ஒருவேளை நகைக்கக் கூடும் என்று கருதியே, 'தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழியே' என்னும் கருத்தை அவர்களுக்கு விளக்க முனைந்தோம். ஒருவேளை பெரியாரே நாம் நினைப்பதுபோல் அல்லாமல் உண்மையிலேயே தமிழைப் பழிக்க வேண்டும் என்ற நினைப்போடு அப்படிக் கூறியிருந்தால், அவருக்கும் இது விடையாக அமையட்டும். ஆனால் அப்படி அவ்வாறு மாறாகக் கருதியிருப்பது உண்மையானால் திரு. காமராசரைப் பச்சைத் தமிழர் என்றும் திரு. அண்ணாத்துரையை அவரைவிடத் தகுதியான தமிழர் என்றும் கூறுவாரா? அப்படியானால் 'காமராசர் பச்சைக் காட்டு மிராண்டி' என்றும் 'அண்ணாத்துரை அவரை விடக் காட்டுமிராண்டி' என்றுமன்றோ பொருள் பட்டிருக்கும். அப்படிப் பொருள் படுத்திக்

கொண்டன்றே, வட நாட்டினர் "பெரியார் தமிழைக் காட்டு மிராண்டி மொழி என்று கூறியும், காமராசரும் அண்ணாத்துரையும் ஏன் அவருக்குச் சரியான விடைகொடாமல் ஊமையர்கள் போல் இருக்க வேண்டும்" என்று கேட்கின்றனர்.

தமிழன் வேண்டும்; தமிழ் வேண்டாவா ?

இனி, பெரியார் கூறிய கூற்றுக்கு இப்படியெல்லாம் உண்மைப் பொருள் கொள்ள இடமுள்ளது என்றாலும், அவர் உண்மையிலேயே தமிழ்ப்பற்று அற்றவர்தான். தமிழன் பற்று இருந்தாலும் அவர்க்கு அவன் மொழியைப் பற்றிக் கவலை இல்லை. தமிழ் ஒழிந்து போய், தமிழன் முன்னேறிவிட்டால் போதும் என்பதே பெரியார் கருத்து. ஆனால், நாமோ, தமிழ் ஒழிந்து போனால் தமிழனே ஒழிந்து போவானே, அப்புறம் எப்படித் தமிழன் முன்னேறினான் என்று கூறுவது; அதனால் தமிழும் ஒழியக் கூடாது; தமிழனும் முன்னேற வேண்டும்;தமிழன் முன்னேற்றம் தடைப்பட்டதற்குத் தமிழ் காரணம் இல்லை; தமிழனின் மடித்துயிலும், மானமற்ற போக்கும்,அறியாமையும், சோம்பேறித்தனமும், அடிமை வாழ்வுந்தாம் காரணங்கள் என்று தெளிவாகக் கூறுகின்றோம். பெரியார் இப்படித் தமிழைப்பற்றிக் குறைவான மதிப்பு கொண்டுள்ளதற்கு அவர் பார்த்த தமிழெல்லாம் கம்ப இராமாயணத் தமிழும், பாரதத் தமிழும், பிற பத்தாம் பசலிப் புலவர்கள் எழுதிய புத்தம் புதிய புளுகுரைகளின் தமிழுந்தான். அவை ஒழிய வேண்டும் என்பதில் நமக்கும் கருத்து வேறுபாடில்லை. ஆனால் அதற்காகத் தமிழையே ஒழிப்பதா? அதையே இழிவு படுத்திப் பேசுவதா? நம் முகத்தை அழுக்குப் படுத்திக்கொண்டு, கண்ணாடியின் மேல் கல்லெறிவதா? எழுத வரவில்லை, அல்லது எழுதுவதெல்லாம் கோணல் என்பதால் கரும்பலகையை உடைப்பதா? 'முகத்தைக்கழுவிக் கொள்ள வேண்டும்; அல்லது எழுதக் கற்றுக்கொள், என்று கூற விரும்பும் ஒருவன், 'கண்ணாடியை உடை, அல்லது கரும் பலகையை உடை" என்று கூறுவது. ஒருவேளை கண்ணாடி பழுதென்றாலோ, கரும் பலகை சரிவர எழுதப் பயன்படவில்லை என்றாலோ அவற்றை உடைக்கத்தான் வேண்டும். நம் கால்களில் நரகலை மிதித்துக்கொண்டு காற்றைத் திட்டுவதா? இவையெல்லாம் பெரியார்க்குத் தெரியாவா?

நிலத்தை வைத்துக்கொண்டு விளைவு காணாதது யார் குற்றம்?

ஆனால் பெரியாருக்கு இயல்பாகவே தமிழ்மேல் வெறுப்பு. "என்னைப் பொறுத்த வரையில் தமிழ் போய்விட்டால் கூட இன்று நமக்கு எவ்வகையான இழிவும் இல்லை என்று கருதுகிறவன் நான்.

தமிழ் ஒழிய வேண்டும் என்ருல்கூட நான் எவ்வகை மறுப்பும் தெரிவிக்க மாட்டேன். நமக்குத் தமிழின் பெருமையைப்பற்றிப் பேசத்தான் தெரியும். தமிழன் அப்படி வாழ்ந்தான்; இப்படி வாழ்ந்தான்; தமிழ் மொழி அப்படி இருந்தது; இப்படி இருந்தது என்று. என்ன ஆச்சு அதனுல்? நாம் இன்னும் பழங்காலக் காட்டுமிராண்டிக் காலத்திலேயே இருந்து கொண்டு மற்ற மொழியினுல் ஏற்பட்ட நாகரிகப் பொருள்களை-கருத்துகளைப் பயன்படுத்தி வருவதைத் தவிர, அத்தகைய அறிவை இந்த மொழியோ, மொழி இலக்கியமோ தந்திருக்கிறதா?'' என்பது பெரியார் கேள்வி. [பெரியார் 10-2-1960 சென்னை சட்டக்கல்லூரிப் பேச்சு].

எப்படிப் பெரியாரின் கேள்வி? ''என்ன, இந்த நிலத்தில் புல்லே விளைந்து கொண்டிருக்கின்றது. நெல் விளையும் நிலம் என்று சொன்ஞர்களென்றன்ரே வாங்கினேன்.'' என்று ஒரு சோம்பேறி நிலத்தைப் பழித்தாளும்! வள்ளுவர், அத்தகைய சோம்பேறி ஒருவனை நிலம் கண்டு சிரித்தது என்கின்ருர்.

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

அந்த வள்ளுவர் காலத்துச் சோம்பேறியைத்தான் பெரியார் பேச்சு நமக்கு நினைவூட்டுகின்றது.

தமிழ் படித்தால் போதுமா? முயற்சியில்லையே......!

தமிழ் படிக்காமல் ஆங்கிலம் படித்தால் தமிழர் முன்னேறி விடுவர் என்று பெரியார் கருதுகின்ருர் போலும். பெரியார் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். உலகில் ஆங்கிலம் பேசுபவர்கள் மட்டும் முன்னேறிவிடவில்லை. ஆங்கிலம், உருசியம், சப்பானியம், சீனம், பிரஞ்சியம் முதலிய மொழிக்காரர்களும் முன்னேறித்தாம் உள்ளனர். ஏன் வடநாட்டில் இந்தி மொழி பேசுபவர் கூட முன்னேறித்தாம் உள்ளனர்(!). ஆங்கிலம் ஒரு மொழி; அதில் அறிவில்லை. அது படித்தவுடன் சுரப்புத் தரும் மணிமேகலையின் 'சுரப்போடு' அன்று. அதைப் பேசுபவர்கள் முயற்சியுடையவர்கள்; அறிவுடையவர்கள்; ஆற்றலுடையவர்கள். அதனுலேயே அவர்களுக்கு முன்னேற்றம் வாய்த்துள்ளது. விளை நிலம் என்பதால், விதை போடாமலேயே, எரு இடாமலேயே, தண்ணீர் பாய்ச்சாமலேயே, காவல் காவாமலேயே விளைந்து வீட்டுக்கு வந்து விடும் என்று பொருளில்லை. இன்றையத் தமிழன் சோம்பேறி. பிறரை ஏமாற்றிப் பணம் பறிக்கும் பிற கூட்டங்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபின் அவன் இனமே தறிகெட்டுப்

போயிற்று. இந்நிலையில் தன்னைக் காவாத தமிழன், தன் மொழியின் பெருமையை மட்டும் வைத்துக் கொண்டு எங்ஙன் பிழைக்க முடியும்? தமிழனால் முடியவில்லை என்பதால் தமிழால் முடியவில்லை என்று பொருளில்லை. அல்லது தமிழ்தான் அவனை அப்படி ஆக்கியிருக்கின்றது என்ற கூற்றிலும் உண்மையில்லை. வரலாற்றறிவில்லாதவரே அப்படிக் கூறுவர்.

தமிழின் தகுதி:

உலகில் ஆங்கிலம் படித்தவரைவிட மிகவும் முன்னேறியுள்ளவர் உருசியரே! எனவே ஆங்கில மொழியை விட உருசியம் முன்னேற்றமான மொழியென்றோ, உருசியர் நாகரிகமே நாகரிகம் என்றோ கொண்டு விட முடியாது. மொழியைப் பொறுத்த மட்டில் உருசியத்தினும் ஆங்கிலமே சிறந்து விளங்குகின்றது இல்லையா. உருசிய மொழி இலக்கணம் எழுந்ததே 1755-இல்தான். 'இலாமனசா' என்பவர்தாம் இதை எழுதினார். இவர்தான் உருசிய இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப் படுகின்றார் ஆனால் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலேயே ஆங்கில இலக்கியம சிறப்புற்றிருந்தது. எனவே உருசியத்தை விட ஆங்கிலம் முதுமொழி! சிறந்த மொழி! அகற்சி மிக்கது. ஆனால் ஆங்கிலத்தைவிடப் பன்னூறு மடங்கு தமிழ் பழைமை வாய்ந்தது; சிறப்பு வாய்ந்தது;பல மொழிகளுக்குள்ளும் தாய்மைத் தன்மை வாய்ந்தது. மறவுணர்ச்சி இசுப்பானிய மொழியிலும். உரைநயம் பிரஞ்சிலும், சொற் செறிவு செருமானிய மொழியிலும, சொல்லினிமை இத்தாலிய மொழியிலும், சொல்வளம் கிரேக்க மொழியிலும், சுருக்கமும் தெளிவும் இலத்தீன் மொழியிலும் இருப்பனவாக மேலைநாட்டு மொழியியலார் பிற மொழிகளைப் பாராட்டும் அதே வாயால், தமிழ் மொழி இவ்வத்தனைச் சிறப்பையும் ஒருங்கே கொண்டுள்ளதாகப் பலபடப் பாராட்டியுள்ளனர்.

பகுத்தறிவாகுமா ?

எனவே ஓர் இன மக்களுக்கிடையில் பல்வகை முன்னேற்றமும் ஏற்படுவதற்கு மொழிமட்டும் காரணம் ஆகாது. முயற்சியே காரணம. கிரேக்க மொழி பழைய மொழி. ஏசுக்கிறித்துக்கு முன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெரிய அளவில் வளர்ந்து செழித்த மொழி அது. இப்பொழுது அம்மொழி இருக்குமிடம் தெரியவில்லை. சீன மொழி பழையது; கி.மு. 3000-ஆண்டுகளுக்கு முன்பே அது வரலாறு உடையது. ஏறத்தாழ 40,000 எழுத்துகள்(!) உடைய மொழி. இருந்தும் என்ன பயன்? சீனன் உருசியனைப் போல முன்னேற முடிய

வில்லையே. அவனைப் போல் முன்னேற முடியவில்லை என்பதற்காக அம்மொழிக் காரர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் மொழிகளைக்கொண்டு போய்க் கடலிலா வீசி யெறிந்து விட்டனர்? அல்லது பெரியாரைப் போல் எந்த முதியவராவது அங்கிருந்து கொண்டு "அந்த மொழி காட்டுமிராண்டி மொழி. அதில் ஒன்றுமில்லை" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றனரா? அங்குள்ளவர்களும் அப்படிச் சொல்லத்தான் விடுவார்களா? படிப்பு வரவில்லை; பையன் அறிவில் நாட்டம் கொள்ளவில்லை என்றால் பொத்தகத்தைக் கிழிப்பதா? இது தான் பெரியார் உணர்ந்து கொண்ட பகுத்தறிவா? "இங்குள்ள மக்கள் முட்டாள்கள்; இன்னும் காட்டு மிராண்டிக் காலத்துப் பழக்க வழக்கங் களையே கட்டிக்கொண்டு அழுகிறார்கள்; சாதி என்கிறார்கள்; சமயம் என்கிறார்கள்; சடங்கு என்கிறார்கள்" என்றெல்லாம் வேண்டுமானால், இங்குள்ள மக்களையும், அவர்கள் அறிவில் கொண்டுள்ள நாட்டத் தின் குறைபாட்டையும் சுட்டிக்காட்டி, இடித்துப் பேசலாமே தவிர, அதற்கென்று மொழியையா தாக்கிப் பேசுவது?

தமிழ் நெடுங்கணக்கின் எண்மை ... ...!

அடுத்தபடி அவர் தமிழ் பற்றிய இன்னொரு கருத்தையும் அடிக் கடி கூறி வருகின்றார். "**காட்டு மிராண்டிக் காலத்து எழுத்து. இந்தக் காலத்தில் இத்தனை எழுத்துகள் எதற்கு? ஆங்கிலத்தில் 26 எழுத்து. தமிழிலே 216 எழுத்து**" என்கிறார். இவர் கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆங்கிலத்தில் இவர் கூறும் 26 எழுத்துகளையும் வைத்துக் கொண்டு எவனும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள முடியாது. ஆங்கி லத்தில் பெரிய எழுத்துகள்[Capital Letters]: 26; கையெழுத்துகள் [Writting Letters] 26; சிறிய எழுத்துகள் [Small Letters] 26. இதுவன்றி ஓவிய எழுத்துகள் 26. (இவை தேவையில்லை என்று வைத்துக் கொண்டாலும்) மொத்தம் 78 எழுத்துகளையும் கற்றுக் கொண்டாலும் ஒருவன் ஆங்கிலத்தைப்படிக்கவும் முடியாது; எழுதவும் முடியாது; பேசவும் முடியாது. ஆங்கில நெடுங்கணக்குடன் ஒருவன் ஆங்கிலச் சொற்களுக்கான சரியான கூட்டொலி முறைகளையும் ஓர் ஆசிரியர் வழிக் கற்றுக்கொண்டால் ஒழிய அவனால் ஆங்கிலத்தில் பேச முடியாது. பெரிய பெரிய ஆங்கில அகர முதலிகளில்கூட ஒரு சொல்லைப் போட்டு அதை எப்படிப் பலுக்குவது(உச்சரிப்பது)என்று குறியிட்டுக் காட்டியிருக்கின்றனர். CASTLE என்ற சொல்லை **'கேசெல்'** என்று சொல்லுதல் வேண்டும் என்று ஒருவர் எடுத்துக் கூறினால் ஒழிய, அவன் அதைக் **'சியேசுட்டிலி'** என்றே படிப்பான்.

தமிழில் அப்படி இல்லை. எழுத்துகளை ஒருவன் தெரிந்துகொண்டால் போதும். எத்தனை பெரிய பொத்தகமானாலும் தானே படித்துக் கொள்ளலாம். இவ்வாறு அதைப் பலுக்க வேண்டும் என்று எவரும் கூற வேண்டுவதில்லை. பொருள் அறிவை மட்டுமே இவன் பெருக்கிக் கொண்டால்போதும். மொழி இவனுக்கு இடர்ப்பாடாய் இருப்பதில்லை. மேலும் தமிழில் மொத்தம் 247 எழுத்துகள் என்று கூறுவர். [216 என்று பெரியார் கூறுவது உயிர்மெய் எழுத்துகளை மட்டுமே.] ஆனால் அக்கருத்து பிழை. க் என்பதும் க என்பதும் வேறு வேறு எழுத்தல்ல. இதுபோல் 18 மெய்களே 216 எழுத்துகளிலும் சிறு சிறு குறியீடு களுடன் (ஆனால் மொத்தம் 7 குறியீடுகளே) திரும்பத் திரும்பக் கூட்டெழுத்தாக எண்ணப்படுகின்றன. இம்முறையே தமிழ் நெடுங்கணக்கிற்கிருக்கும் சிறப்புகளில் ஒன்று. [சில மாற்றங்கள் பிற்காலத்தவை என்றாலும் ஆய்ந்து செய்யப் பெற்றமையால் அறிஞரால் ஒப்புக் கொள்ளப் பெற்றவை.] இவை வழிப் பார்த்தால் தமிழில் உயிர் எழுத்து 6, மெய்18, ஆய்தம் 1 ஆகிய 25 எழுத்துகளும், ா, ெ, ே, ை, ஆகிய நான்கு சிறப்புக் குறியீடுகளும், ஓரிரண்டு கீழ்மேற் காரணப் பொதுக்குறிகளுமே கற்றுக்கொள்ள வேண்டிய எழுத்துகள் ஆகும். இவற்றின் மொத்த வரி வடிவங்கள் 32 ஆகும். ஆனால் அதற்குள் தமிழில் உள்ள சொற்களையும் பிற மொழிச் சொற்களையும் தொல்லையில்லாமல் மிக எளிதாக எழுதிக் காட்டலாம். இவற்றையெல்லாம் அறிஞர்கள் ஆய்ந்து நிறுவியுள்ளனர். மெய்யெழுத்துகளும் உயிர் மெய் எழுத்துகளும் ஒலிவடிவில் சிறிது (அதுவும் அகரவரிசைப் படி) மாறுபடுகின்றனவே அன்றி, (வரிவடிவில் ஓரிரு சிறு மாற்றங்களைத் தவிர)பெரும்மளவில் ஒத்தே இருக்கின்றன. எனவே இவ்வெழுத்துகளின் வரிவடிவங்களைக் கற்றுக்கொள்ள எவ்வகைக் கடினமும் இல்லை. தமிழில் இந்த் 24 எழுத்துகளையும் 8 குறியீடுகளையும் வைத்துக் கொண்டே தமிழில் உள்ள எந்த நூலையும் படிக்கலாம். பெரியார் வேண்டுமானால் எவனாவது ஒரு மாணியை என்னிடம் அனுப்பட்டும். நான் அந்த மாணிக்குத் தமிழை விரைந்து கற்றுத் தருகின்றேன். தமிழ்ப் படிக்கும் குழந்தை பள்ளியில் குறைந்தது 3-ஆம் வகுப்பு வரையே படித்தாலும் தமிழில் உள்ள எந்த நூலையும் எழுத்துக் கூட்டிப் படித்துவிட முடியும். ஆனால் பள்ளி இறுதிவகுப்பு வரை படித்த பையன்கூட ஆங்கிலத்தை அவ்வாறு படிப்பது கடினம். மேலும் பிற மொழிகளில் உள்ள எழுத்துக்களை அறிந்தால் தமிழில் உள்ள எழுத்துகள் மிகுதியில்லை என்று காணலாம். ஆங்கிலத்தில் (26×4)

104, உருதுவில் 36, சமசுக்கிருதத்தில் 51, பெர்சியன் 45, இலாவனிக்கு 40, ஆர்மேனியன் 36, கிரேக்க மொழி 24, இலத்தீன் 23, இத்தாலியன் 21, சீன மொழியிலோ 40,000 எழுத்துகள். அவற்றில் 20,000 எழுத்துகளை அறிந்தாலேயே ஒருவர் பெரும பேரறிஞர் ஆவாராம்!

ஆங்கிலத்தில் எழுத்தெழுத்தாய் ஒருவகை ஒலியையும், எழுத்துகளைக் கூட்டிச் சொற்களைச் சொல்கையில் வேறோர் ஒலியையும் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இவ்வகையில் நாம் ஆங்கில மொழியைக் காலம் முழுவதும் கற்றாலும் நாம் அதன் மொழியை (மட்டும்)முழுமையாகக் கற்றோம் என்று சொல்ல முடியாது. ஒரே எழுத்து வேறு வேறு சொல்லில் வேறு வேறு வகையாய் ஒலிக்கப் பெறும். இத் தொல்லைகளைக் கொண்டே ஆங்கில மொழிநூல் அறிஞர்கள் ஆங்கில எழுத்துகளை இன்னும் விரிவு படுத்த எண்ணியுள்ளனர். குடும்பம் பெருகப் பெருக வீடு பெரிதாகத் தேவைப்படுவது போல், சொற்கள் பெருகப் பெருக நெடுங்கணக்கையே பெரிது படுத்த வேண்டியுள்ளது ஆங்கிலத்தில். தமிழ் மொழியில் அப்படியில்லை. ஏற்கனவே பெரிய வீடு போன்ற நெடுங்கணக்கு உள்ளது. வீட்டிற்குள் போட்டு வைத்த பொருள்களும் ஒருகாலத்தில் நிறைந்திருந்தன. ஆனால் கொள்ளையடிக்கப்பட்டன; சிதைக்கப்பட்டன; அழிக்கப்பட்டன. இக்காலோ தமிழன் அதைக் காலியாகவே வைத்துக் கொண்டுள்ளான். வீடு காலி என்பதனால் அஃதை ஏன் இடிக்கவேண்டும். பொருள்களைக் கொணர்ந்து வீட்டை அன்றோ நிரப்புதல் வேண்டும்.

தப்பு மட்டுமன்று: முன்னேற்றத் தடையுமாகும்!

பெரியார் இவைபற்றி ஒரு வேளை அறிந்திராமல் போனால், அவர் அறிந்தவைபற்றிப் பேசுவதோடு நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். மருத்துவ மனைக்குள் ஏதாவது ஒரு வேலையில் அமர்ந்து விடுவதாலேயே மருத்துவராகி விடமுடியாது. அதுபோல் தமிழகத்தில் இருந்து கொண்டிருப்பதாலும், தமிழில் பேசத் தெரிந்திருப்பதாலுமே தமிழறிஞர் ஆகிவிட முடியாது என்பதைப் பெரியார் நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். மேல் நாடுகளில் இதுபோல், தங்கட்குத் தொடர்பற்ற பிற துறைகளில் மற்றொரு துறையினர் பலவகையான கருத்துகளையும் தத்துப்பித்தென்று கூறிக் கொண்டிராமல் இருப்பதால்தான், அங்கு அறிவு வளர வழி அமைகின்றது. இங்கு அவலிடிக்கிறவன் உழவனைக் குறை சொல்கிறான்; ஆடமாட்டாதவன் மேடையைக் கோணல் என்கிறான். தெரிந்திருந்திருந்து பேசுவது பிழையில்லை. தெரியாமல் பேசுவது தப்பு மட்டுமில்லை; முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்திவிடும். இதுவரைப் பெரியார் தமிழைப்பற்றிக் கூறுவதற்கு அவர் ஒருவாற்றானும் தகுதியுடையரல்லர் என்பது பற்றியும், தமிழ் மொழி ஆங்கிலம் அல்லது பிறமொழிகள் போலன்றி மிக உயர்நததும் சிறந்ததுமாக இருப்பினும்,தமிழர்தம் சோம்பலாலும் அக்கறையின்மையாலும், அது பிறர் ஏளனமாகப் பேசுவதற்காட்பட்டுக் கிடக்கின்றது என்பது பற்றியும், ஒருசில கூறினோம். இனி, அவ்வுயர்தனிச் செம

மொழியைப் பெரியார் காட்டு மிராண்டி மொழி என்று கூறுவது எப்படி ஒருவகையில் சரியாகும என்பதுபற்றி ஒருசில கூறுவோம்.

உலகத் தோற்றமும், தமிழ் மாந்தனும்!

இவ்வுலகம் தோன்றி ஏறத்தாழ 200 கோடி ஆண்டுகள் ஆகின்றன என்பர் நிலவியலறிஞர். அதில் உயிர் தோன்றி வளர்ந்து மாந்த உருவெய்தி ஏறத்தாழ 20 இலக்கம் ஆண்டுகள் ஆகின்றன. இனி, அந்த மாந்தன் வளர்ச்சியடைந்து, ஓரளவு முழு மாந்த நிலைக்குத் திருத்தம் பெற ஏறத்தாழ 50,000 ஆண்டுகள் ஆயின. அவ்வாறு திருத்தம் பெறும் முன், அவன் காட்டு விலங்குகளுள் ஒன்றாகவே-காட்டு மிராண்டியாகவே காலம் கழித்து வந்தான். இவ்வாறு மாந்தன் தோன்றியதும், வளர்ந்ததும், அவன் காட்டு மிராண்டியாய்த் திரிந்ததும் இக்காலக் குமரிக் கடலெனப்பரவி நிற்பதும், அக்கால் கிழக் காப்பிரிக்கா, ஆத்திரேலியா, சாவா, சுமத்திரா, மடகாசுகர் முதலிய பெரு நிலங்களை இணைத்து நின்றதுமான குமரிக் கண்டத்திலேயே என்பர் அறிஞர். [1. Geology of India, chapter IX. The Gondwana system P. 109. 2. The imperial gazetteer of India P. 80. 3. Out line of History: H. G. WELLS. P. 14. and 76.] அவன் அதன் பின் சிறிது அறிவு வரப்பெற்றுக் கல்லால் கருவிகளைச் செய்யத் தொடங்கிக் காட்டு விலங்குகளைக் கொன்று தின்று உயிர் வாழ்ந்து வந்தான். அக கற்காலம் இற்றைக்கு ஏறத்தாழ 5,00,000 (ஐந்து இலக்கம்) ஆண்டுகளின் முன். அது பழைய கற்காலம் என்று வரலாற்றில் குறிக்கப் பெறும். ஏறத்தாழ அக்காலத்தியதாகக் கருதப்படும் மிகப் பழங் கற் கருவி ஒன்று நடு இந்தியாவில் அகப்பட்டுள்ளதாக அறிஞர் கூறுவர். அவன் அதனபின் நெடுங்காலம் விலங்கோடு விலங்காய்த் திரிந்து அதன்பின் உணர்வு வரப்பெற்றுத் தனக்குள் சில உணர்வொலிகளையும் பல குறிப்பொலிகளையும் எழுப்பிச் செய்கையாலும் ஒலியாலும் ஓர் ஊமை நாடக மொழியை உருவாக்கினன். அவ்வாறு தோன்றிய ஒலிக் குறிப்புகளை வரையவும தொடங்கினன். அக்காலே அவன் கூட்டத்துள் சிலர் பலவாறு சிதைந்து உலகின் பல பகுதிகளுக்கும் சென்று வாழத் தொடங்கினர். பழங் கற்காலத்தனவாகக கருதப்படும மாந்தன் எலும்புக் கூடுகள், கருவிகள் யாவும் பல விடங்களிலும் காணப்படுதலே இதற்குச் சான்றாகும். [A brief history of civilization J. S. HOYLAND. P. 26.] அவ்வாறு உலகின் பலபகுதிகளிலும் காணக் கிடக்கும் பழங்கற்கால மாந்தனின் மண்டை ஓடுகளும் பிற எச்சங்களும ஒரே இனத்தனவாகவும், ஒரே வகையினவாகவும் தெரிய வருகின்றன. [Out line of history. H. G. WELLS P. 74.] அவ்வாறு காணப்படும எலுமபுக் கூடுகளுள தென்னிந்தியப் பகுதிகளில் கிடைப்பனவற்றையே மிகப் பழைமை வாய்ந்ததெனக் கூறலாம. ஆகவே தென்னிந்தியாவை உள்ளடக்கிய குமரி நாடே மாந்த இனத்தின் தொட்டில் என்று திட்டமாய்க் கூறலாம். [Sir. John Evans].

முதல் உலக மொழி:

அனறைய கற்காலம் மாந்தனின் உணர்வொலிகளும், குறிப்பொலிகளுமே அதன்பின்–ஏறத்தாழ 50,000 ஆண்டுகளுக்கு முன் பழந்தமிழாய் மலர்ந்து நின்றது. அம்முழுமை பெரு முதல் தாய் மொழிகளுக்கு மூல ஒலிகளாய் நின்ற குறிப்பொலிகளே, குமரிக்கண் – மாந்தனின்று பிரிந்து சென்று குடியேறி ஆசியா, இந்தியா, கிழக்குத் தீவுகள், அமெரிக்கா, ஆத்திரேலியா முதலிய பெருநிலப் பரப்புகளில் நின்று தோன்றி வளர்ந்து நின்ற மக்கள் கூட்டத்தினரின் மொழிகளாக விரிவு பெற்றன. இதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் ஏராளம். கிறித்துவரின் பழைய ஏற்பாட்டில் உலகில் எங்கும் ஒரேமொழி வழங்கப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளது. யூப்பிரடீசு, டைகரிசு ஆற்றுப் படுகை நிலமான சுமேரியாவிலும், பாபிலோனிலும் வழங்கிய மொழி தமிழ் போன்றதொரு மொழியே. பழைய அமெரிக்க மொழி, பழந்தமிழ் மொழியோடு மிகவும் ஒற்றுமையுடையதாக இருந்தது. [Fredric Wrights – Origin and antiquity of man]. கிழக்குத் தீவுகள், அரப்பா, மொகஞ்சொதாரோ, மேற்கு ஆசியா, ஆப்பிரிக்கா, அரேபியா முதலிய நாடுகளில் மிகப்பழங்காலத்தில் வழங்கிய எழுத்துகள் ஒரே வகையின. [A Book of the Beginnings - Gerald Masey]. ஆத்திரியா மொழிச் சொற்களுக்கும் சுமேரிய மொழிச் சொற்களுக்கும் மிக ஒற்றுமை இருந்தன. [Prof. Prize – Lushi] இற்றைக்குள்ள தமிழ் மொழிக்கு முற்பட்ட பழந்தமிழ் ஏறத்தாழ இருபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியா முழுமையும் பேசப்பட்டது. [Bulletin No. 3. Ramavarma Research Institute]. நடு அமெரிக்காவில் வாழும் மாயா என்ற இன மக்கள் பழந்தமிழ் மக்களின் கிளையினர். [மேற்படி நூல்: BULLETIN. No 3] சின்ன ஆசியாவில் உள்ள இலிசியா நாட்டு மக்களின் முந்தை அரசன் இலிசியன். இவன் தந்தை பாண்டியன். இவர்கள் பேசிய மொழி தெமிலி. இவர்கள் தெமிலியர் எனப்பட்டனர். [ந.சி.க. வரலாற்றுக்கு முற்பட்ட பழந்தமிழர்] எகுபதியர் பண்டு நாட்டினின்றும் செங்கடல் வழியாக வந்து நீல [Nile] ஆற்றங் கரையில் குடியேறியவர்கள். ஒபிர் என்னும் இடம் பண்டு நாட்டில் உள்ளதெனக் கருதப்பட்டது. பண்டு நாடு(பழைய பாண்டிய நாடு). சுமேரியர் தமிழரே. [Ancient History of the near East. R. H. HALL. P. 171]. ஆரிய மொழி பரவுமுன் ஐரோப்பாவின் இடப் பெயர்கள், ஆற்றுப் பெயர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பெயர்களாகவே இருந்தன என்று கிளிமெண்டு சுகோனர் என்னும் செருமானியர் கூறுகின்றார். ஆசேனியா, ஐரோப்பா, ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்கு நாகரிகத்தைப் பரப்பியவர்கள் சுமேரியத் தமிழர்களே [Prof. Prizy Lwski].

முதல் காட்டு மிராண்டி.

பழைய கற்காலத் தமிழர்களே உலகத்தின் முதன்முதற் காட்டு மிராண்டிகள். அவர்கள் காட்டு மிராண்டிகளாக இருந்த பொழுதே

தோன்றிய மொழி தமிழ் ஆகலின், அஃது ஒன்றே முதற் காட்டு பிராண்டி மொழி யெனக் கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது. தமிழ் வெறும் உரப்பொலியாகவும், உணர்வொலியாகவும் இருந்து அதன பின் குறிப்பொலியாகவும, சுட்டொலியாகவும் வளர்ந்து விரிவிடைந்த பின்தான், பழங்காலத் தமிழன் குமரிக் கண்டத்தை விட்டு அகன்றுள ளான். அவனே உலகெங்கணும் பரவிப் பல்லாயிரக்கணக்கான மொழி கள் வளர முதல் தாயுமாய்த தந்தையுமாய் இருந்திருக்கின்ருன். அக்கை, அக்காள் முதலிய உறவுச் சொற்கள் பினனிய மொழியில் [Finland] காணப்படுகின்றன என்றும, அத்தா, அன்னை முதலிய சொற்கள் கிதைதி மொழியில் காணப்படுகின்றன என்றும் அறிஞர் கள் குறிப்பிடுகின றனர். பழைய சுமேரியச் சொற்களில் ஆறு, அப்பா, ஆக்கு(தீ), அமா(அம்மா), ஆர்(ஏர்), ஆசா(அரசன்), பாத்(பாதை), பூர்(வார்-கடல்), தாக்(தாக்கு), தரி(தறி), தர்(தரை). தப்(துப்பு) முத லிய எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் காணபபடுகின்றன என்று தக் காண மொழியாய்வுக் கல்லூரி (1939-40) எடுத்துக்காட்டியுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் தந்தை தேராகு வாழ்ந்த நகர் 'ஊா' எனனும் தமிழ்ப்பெயரால் குறிக்கப் படுகின்றது. அதில் வாழ்ந்தவரே ஊரியர் என்று குறிக்கபபடுகின்ருர். அவரே ஆரியர் என்று பிற் காலத்துக் குறிக்கப் பெற்றுள்ளாா. அவர் இந்தியாவுக்கு வந்த காலம் கி.மு. 1200. அதற்கு முன் ஆரியர் என்ற இனமே இந்தியாவில் இல்லை என்று [G.R. HUNTER, என்னும்] அறிஞர் கூறுவர். [NEW REVIEW. VOL 3 - P 314]. தமிழரின் ஞாயிறு வணக்கமே உலகம் எங்கணும் பரவிக் கிடந்தது. ஏசுநாதருக்கு முந்திய யோவான் உயர்ததிச் சென்ற சிலுவைக் கொடியும் உண்மையான சூரியக் கொடியே ஆகும். [சூரியன் தமிழ்ச் சொல்லே. சுள்-சுர் - சூர் — சூரியன். [முதல் தாய்மொழி. — பாவாணர்]

தமிழ் இந்தியா !

வரலாற்றுக் காலத்திற்கு முன் இருந்த குமரி நாடு அழியவும் இந்தியாவின் வடக்கே பனிமலை [முதலில் கடல் நீராய் நின்றது] பின் மேல்நோக்கி எழுந்தது. நடு இந்தியாவின் வடவேங்கட மலைக்குப் பின்னுள்ளது முற்றும் நீரால் மூழ்கியிருந்த நிலப்பகுதியே. அப்பகுதி நிலததுள் இன்றும நீர் வாழ் இனங்களின் கல்மாறிகள் கிடப்பதும், வடவேங்கடத்திற்குத் தெற்குப்புற இந்தியாவின் பெருநிலத்துள் பழங் கற்காலக் கருவிகள் கிடப்பதுமே இதற்குச்சான்றென்று அறிஞர் கூறு கின்றனர். அதன் பின்னரே வட இந்தியா எங்கணும் தமிழர் குடி யேறினர். இந் நிகழ்ச்சி நடந்தது குமரிக் கண்டம் முதற் கடற் கோளால் அழிந்த காலத்திற்கு முன்பே. முதற் கடற்கோள் காலம் கி.மு. 2387-இல் என்று இலங்கை வரலாறு கூறும். பழைய தமிழ் மொழியே கிறித்துவர் வரலாறு கூறும் கல்தேய மொழிப் பகுதியில் வழங்கிய மொழிகளுக்கு மூலமானது. அம்மொழியின் திருத்தமே வட இந்தியாவில் பாலியாகவும் தெற்கே பின்றையத் தமிழாகவும் மாறின வென்று தெயிலர் [PROF. TAILOR] என்னும் அறிஞர் கூறுவர்.

பெரும்பாலான கல்தேயச் சொற்களையும், பழைய பாலிச்சொற்கள் பல வற்றையும்கொண்டு சமசுக்கிருதம் வளர்ந்தது என்பது அவர் கருத்து.

இலக்கியச் சான்று!

இங்கெடுத்துக் காட்டப்பெற்ற மொழியியல், நிலவியல், மாந்த வியல் வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டு பார்க்கையில் அளப்பரி தாம் வளப்பமும், அகன்ற பரப்பும் கொண்ட நம் அருமைத் தமிழ் மொழி எத்துணைப் பழமை வாய்ந்தது என்று புலப்படுகின்றதன்றோ? நாகரிகமற்ற பழைய கற்கால மக்களிடையே தோன்றி வளர்ந்ததா லன்றோ,'கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி' என்று புறப்பொருள் வெண்பாமாலையும்,

''முன்னிருந்த பாலி மொழியும் கீர்வணமும்
துன்னுங் கருப்பையிலே தோய்வதற்கு முன்னரே
பண்டைக் காலத்தே பரவை கொண்ட முன்னூழி
மண்டலத்திலே பேர்வள நாட்டின் மண்டுநீர்ப்
பேராற் றருகில் பிறங்கு மணிமலையில்
சீராற்றும் செங்கோற் றிறஞ்செங்கோ – நேராற்றும்
பேரவையி லேநூற் பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாரரசு செய்ததமிழ்ப் பைந்தேவி''

–என்று தமிழ்விடு தூதுவும் தமிழையும் தமிழ்க் குடியையும் பரவிப் பாடலாயின. பரிமேலழகரும் ''வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பின் தலைப்பிரித லின்று'' என்னும் திருக்குறளுக்கு உரை எழுதுகையில், ''பழங்குடி என்பது தொன்றுதொட்டு வருகின்ற குடி; சேர, சோழ, பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வருதல்'' என்று கூறிப் போயினர்.

இனி தமிழ், மாந்தன் காட்டு மிராண்டியாய் இருந்த காலத்துத் தோன்றிய மொழி யாதலால்தான், தமிழ் மக்களுக்கு அன்றிருந்து மலையன், வெற்பன், காடன், நாடன், சேரன், வேளிர், ஊரன், பரத வன், குறவன், கல்லன், குன்றன், பழையன், தோன்றல் முதலிய இடங்குறித்த பெயர்களும், களிறன், கரியன், புலியன், காளை முதலிய விலங்குகள் குறித்த பெயர்களுமம, வேடன், மீனன், வில்லன், மல்லன், மாவலி முதலிய வலி குறித்த பெயர்களும் தோன்றலாயின. உலகில் முதல் மாந்தன் தமிழனே; முதல் குடியும் தமிழ்க் குடியே என்பதற்கு இவற்றினும் அகச்சான்று வேண்டுங்கொல்!

இவன் உலகின் முதல் காட்டு மிராண்டியாய்த் திரிந்த பொழுது கல் முழைகளில் கற்பொறி வைத்து விலங்குகளைப் பிடித்து உண்ட செய்தி நம் பழந்தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்டு வருகின்றது.

கல்லடார் என்பது கற்பொறி. இதன் வழிப் பன்றி முதலிய காட்டுண் விலங்குகளும், புலி முதலிய கொடு விலங்குகளும் பிடிக்கப் பட்டன. ''இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடார்'' –புறம்: 19.

''தினையுண் கேழல் இரியப் புனவன், சிறுபொறி மாட்டிய பெருங்கல் லடார், ஒண்கேழ் வயப்புலி படூஉ நாடன்'' –நற்: 119.

"புழைதொறு மாட்டிய விருங்கல் அரும்பொறி" –மலைபடுகடாம்:194.

இனி அக்காலக் காட்டு மக்கள் தீயுண்டாக்குவதற்குத் தீக்கடை கோல்களைப் பயன் படுத்திய செய்திகளும் நம் இலக்கியங்களில் வருகின்றன. தீக்கடை கோல் ஞெலிகோல் எனப்படும்.

"இல்லுறைச் செரீஇய ஞெலிகோல்" –புறம்: 315.
"தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்" –புறம்: 150.
"கானவர் பொத்திய ஞெலிதீ" –புறம்: 247.
"புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்
கல்லா விடையன்" –புறம்: 331.
"–ஞெலிகோற் கொண்ட
பெருவிறன் ஞெகிழ்ச் செந்தீ" –பெரும்பாண்: 325-6.

இத்தகைய செயல்கள் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் குறிக்கப் பெற்றிருப்பதனை நோக்கின் நந்தமிழர் எத்துணைப் பழங் காலத்திலேயே பிறந்து வாழ்ந்து முன்னேறி நாகரிகம் பரவியராக இருத்தல் வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

தமிழே திரவிடம் !

பைபிளில் குறிக்கப் பெற்ற நோவாப் பெருக்கு கி. மு. 2387-இல் நடந்ததாகவும், அதுவே குமரிக் கண்டத்தின் முதற் கடற்கோள் என்றும் அறிஞர் குறிப்பர். அக்கால் நம் தமிழ் மொழி எத்துணையளவு செழித்திருந்தது தெரியுமா? ஏறத்தாழ ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலக்கண இலக்கியங்கள் செறிந்து விளங்கியிருந்தவன்றோ? அதற்கு முன் ஐயாயிரம் ஆண்டுகளாகவன்றோ தமிழ்க் கழகம் இருந்ததாகவும் பண்டைத்தமிழ் நூல்கள் சாற்றுகின்றன. இன்னும் இதில் வியப்பு என்ன வென்றால் தமிழ் மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் எழுதிய நூல்களிலும் சரி, பிற நூல்களிலும் சரி தமிழம் என்றோ, நம் நாகரிகம் தமிழ நாகரிகம் என்றோ குறிக்கப் பெறவேயில்லை. பெரும்பாலும் திராவிட நாகரிகம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. திராவிடம் என்பது தனியாக ஒரு மொழியே அன்று. ஒரு மொழியின் கூட்டுத் தொகுதிப் பெயரும் அன்று. தமிழுக்கு ஆரியர் இட்ட பெயர் வழக்கு. திராவிடம் என்ற சொல்லே கி.பி. 300க்குப் பின்தான் வழங்கப்பட்டு வருகின்றது. தமிழம் என்ற சொல்லே-வடமொழியில் திரமிளம் என்றுசித் திராவிடம் என்று மாறி வழங்கும். ஆரியர் நுழைவே கி மு. 1200க்குப்பின் தான் என்று முன்னர் குறித்தோம். ஆரிய வேதங்களில் மிகப் பழைய வேதமான இருக்கு வேதத்தின் காலமே கீழெல்லையாக கி.மு. 1500 என்று குறிபபர் அறிஞர்.

தமிழ்த்தாய் பெற்ற சேய் மொழிகள் !

பாலியும் தமிழும் கலந்து ஆக்கிக் கொண்ட மொழி சமசுக்கிருதம் மட்டுமன்று. அது போன்ற ஆயிரக் கணக்கான மொழிகள் ஆகும். ஆப்பிரிக்காவிலும் அதை அடுத்துள்ள பலநாடுகளிலும் வழங்கும் யசமிதிக் இனமெனக் கருதப்படும் மொழிகளாகிய அரபி, எதியோப்பியம், காலுனியம், எபிரேயம், பொனிசியம், சுமாரித்தம், அசீரியம், பாபிலோனியம், சீரியம், கல்தேயம், ஈரானியம், பெர்சியம் முதலிய

மொழிகளும் அவற்றின் கிளை மொழிகளும், பண்டைய ஐரோப்பாவி லும் அதைச் சார்ந்த நாடுகளிலும் வழக்கில் உள்ளனவும், வழக்கிறந்த னவுமான கிரேக்கம், இலத்தீன், தியுத்தானியம், கெல்தியம். இத்தாலி யம், சிலாவனியம், செருமானியம், காண்டிநேவியம், கோதியம், டச்சு, ஆங்கில சாக்சன், ஆங்கிலம் முதலிய மொழிகளும், ஆசியாப் பகுதி களிலும், அதைச்சார்ந்த நாடுகளிலும் வழங்கும் துரானிய இனமெனக் கூறப்படும் மொழிகளாகிய மலாயம், முண்டா, தைக்கம், பர்மியம், சிங்களம், துங்கியம், மங்கோலியம், துருக்கியம், சாமெடியகியம், பின்னியம் சீனம், சப்பானியம் முதலிய மொழிகளும், இக்கால் வட இந்தியாவில் வழங்கி வரும் வங்காளி, அசாமி, ஒரியா, சிந்தி, பஞ்சாபி பலுசியம், மராத்தியம், குசராத்தியம், காசுமிரி, நேபாலி (புது பாலி மொழி) கோட்டா, கோண்டு, கூய், ஓராண், இராசமகால், பிராவி, பிராகிருதி முதலிய எண்ணிறந்த மொழிகளும் பண்டைத் தமிழ்த் தாய்க்குத் தோன்றிப் பிரிந்து தனியாய் வளர்ந்து மாறிய சேய்மொழி களே என்பதை மொழியியல் அறிஞர்கள் வரையறுத்துக் கூறுவர். பண்டைத் தமிழிலிருந்து இவை தோன்றின போல், பிற்காலத்தில் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், குடகு, படகு, தொதகம், சவுராட்டிரம் முதலான மொழிகளும் கன்னித்தமிழினின்று தோன் றிய சேய மொழிகளே!

தமிழ் ஒரு காட்டு மிராண்டி மொழியே !

தமிழ் காட்டு மிராண்டித் தமிழாய் இருந்த காலத்தில் உலகம் முழுவதும் வெறுமை இருள் படர்ந்து கிடந்தது என்பது வரலாறு காட்டும் உண்மை. இந்த வரலாறு பிற்காலத் தமிழரசர் தம் பேதைத் தனத்தாலும், பிற்காலத் தமிழர் தம் கோழைத் தனத்தாலும்,. அடிமை நயப்பாலும், ஆரிய நாடோடிகளால், பார்ப்பனத் தில்லுமல்லுக் குப்பைக் குன்றுக்குள் மறைந்து கிடந்தன. இந்த வரலாறு இக்கால் உலகத்தில் உள்ள தமிழன் ஒவ்வொருவனுக்கும் உணர்த்தப் பெறுதல் இக்காலத் தமிழ்த் தலைவர் ஒவ்வொருவரின் கடமையாகும் இஃதிவ்வா றிருக்கத் தம்மைத்தமிழர்தலைவர் என்று பட்டயந்தீட்டிக்கொண்டுள்ள ஒருபெரியவர் தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி என்பதில் தமிழனுக்கு என்ன இழிவு(!)வந்து விடும்? அதனால் பெருமையே. தமிழன் காட்டு மிராண்டியாக வாழ்ந்த பொழுது கிரேக்கன், பாபிலோனியன், சுமேரி யன், சிந்துவெளிமாந்தன், ஆரியன், எபிரேயன், யவனன், ஆத்தி ரேலியன், பிரித்தானியன் முதலான எண்ணிறந்த இனத்தோர் கருவி லும் இல்லை; காற்றிலும் இல்லை. வாயடியும், கையடியும் செய்து, வாழ்ந்த தமிழரை, -தம்மை வாழ்வித்த தமிழரை ஏமாற்றி, வரலாறு, மொழி, -பண்பாடு முதலிய அத்தனைச் சான்றுகளையும் அழித்துக் கொண்டு வந்த-வரும், ஆரியப் பார்ப்பனர்களும் தமிழர்க்குப் பிறந்த வர்களே என்றும் அவர்கள் மொழியும் தமிழ(திராவிட)மொழித் தோன் றலே என்றும் நினைவில் வைத்துக்கொள்க. ["There are number of verbal roots and words in Sanskrit which do not appear to accur in other Indo-European languages. It is probable

that atleast a considerable Portion of such words and bases have heen borrowed from the Dravidian." (Dr. GRAIARSEN.] [The fact the Sanskrit Possesses cacuminal dentals may possibly be accounted for by its spreading over Dravidian territory where those Particular sounds are quite commonly found in the Dravida dialects"]

William L. GRAFF.

ஆரிய மொழியாகிய சமற்கிருதத்தின் தோற்றமே கி. மு. 1200க்குப் பின்தான். அதன் முதல் இலக்கிய நூலான வான்மீகி இராமாயணமே கி. மு. 2-ஆம நூற்றாண்டில் தான தோன்றியது. வடமொழியின் 100க்கு எண்பது சொற்கள் ஆரியத்துக் குரியன அல்ல. இத்தகைய ஓரினமும், மொழியும இன்று எள்ளி நகையாடும் அளவுக்கு நம் தமிழ்த் தந்தை என்று கருதப்படுபவர் 'தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று உலகிற்கே நாகரிகம் கற்பித்த ஒரு மொழியை இழித்துக் கூறுகின்றார் எனில், அவர் அறிவு எந்த அளவினது; தமிழ்ப்பற்றும் தமிழர் பற்றும் என்ன திறத்தன என்பவற்றைத் தமிழரே உய்த்துணர்ந்துகொள்க.

காட்டு மிராண்டித்தனம் என்றால் எது ?

இதுகாறும் கூறியவாற்றால், உண்மைத் தமிழர் பெரியார் போன்ற மொழியறிவிலார் கூறும் தமிழ்மொழி பற்றிய கருத்துரைகளுக்கு எவ்வகையானும் செவிசாய்க்க வேண்டியதில்லை என்றும, அவர் 'காட்டு மிராண்டி மொழி' என்று கூறிவரும் நம் பண்டைத் தமிழ்மொழி உண்மையிலேயே மாந்தன் காட்டு மிராண்டியாக இருந்த காலத்தே தோன்றியதுதான் என்றும் பெருமைப்படுவதுடன்; உலகில் இதுவரை தோன்றிய ஏறத்தாழ ஆறாயிரம் மொழிகளுள் அழிந்தவை போக எஞ்சியுள்ள 2700 மொழிகளுள் தமிழே மிக மிகப் பழமை வாய்ந்த தொன்முது மொழியாயிருப்பதுடன், உலக மொழிகளையே தோற்றுவித்த முதல் தாய்மொழியாக விருப்பதும் கண்டு கழி பேருவகை கொள்க. மேலும், தமிழ் காட்டு மிராண்டி (BARBAROUS)மொழியாகப் பேசப்படுவது ஏன் என்றும் எண்ணிப் பார்த்தாலும் நம் கடனாகும். ஒரு வலிந்த மொழி, தன் பழம் பெருமையையும், பண்பாட்டையும் கைவிட்டு விட்டுத் தன்னைப் பேசுவாரது கவனக் குறைவாலும அறியாமையாலும் சீரழிதலும், தாழ்வுறுதலும், மொழித் தூய்மை கெடப் பெறுதலும காட்டுமிராண்டித் தனத்திற்கு நழுவிச் செல்வது ஆகும் என்பதையும நினைவில் நிறுத்துங்கள். [A wild Powerful tribe may barbarize a weaker, more civilized people, by forcing them to give up their culture and the language is barbarized when it is corrupted, or its standards are lowered, through the carlessness or ignorance of those who speak it. To break the laws of grammer is to barbarize and we also say that a nation falling away from civilization.

-HAROLD WHEELER'S Children's Dictionary. Vol: I]

-பெருஞ்சித்திரன்.

இலக்கியம்

நூறாசிரியம்

துரை - மாணிக்கம்

பாட்டு: எ.

நாடு பலவாக; மொழி பலவாக!
ஆடமை கொடியின் அரசு பலவாக!
மாணும் ஒழுகினும் மக்கள் பலராக!
எத்திசை என்னோ ராயினு மத்திசைப்
புலனும் உளமும் பூண்டா ராகி,
நிலத்துயிர்க் கெல்லா மளியி னிரங்கிப்
புலத்துறுப் புய்க்குஞ் சான்றவ ருளரே!
வெம்மை மாக்களும் வினையழி வாரும்
மும்மையு முளரவர் உய்யல் வேண்டிப்
பன்னூல் நுவன்று பாதை தெரித்தல்
மெய்ந்நூல் நின்ற மேலோர் பாடே!
ஊருணி மருங்கிற் பல்லதர் வகுத்து
நீருண வருஉம் வேட்கை யோர்க்கு
நின்றது தணிப்பதக் கடனே!
என்றும் வாழுந ரித்தகை வோரே!

பாட்டு: எ.

பொழிப்பு: இவ்வுலகத்து நாடுகள் பலவாகும்; ஆங்காங்கு வழங்கும் மொழிகளும் பலவாகும். அவற்றை ஆளும், ஆடுகின்றதும் அமைகின்றதுமான அறுவை இலச்சினையாகிய கொடிகள் சான்ற அரச அமைப்புகளும் பலவாகும். அவ்வமைப்புகளுக்கடங்கிப், பெருமை மிக்க நாகரிகத்தும் பலராவர். இவ்வழி, எவ்விடத்தாராயினும், எம் மக்கட் பிரிவினராயினும், அவ்வவ்வழி அறிவுணர்வும் உள்ளவுணர்வும் பூண்டவராகி, இவ்வுலகின்கண் கால்கோளும் எல்லா வகை உயிர்கட்கும் அருளால் இரங்கல் செய்து, அவ்வுயிர்கள் தாங்கிய புலன்களின் உறுப்பு விளக்கத்திற்கு அவற்றை வழிநடத்துதற்குச் சால்பு மிக்க தன்மையர் என்றும் உளராக. அவர் உளர் போலவே, அறிவானும் உளத்தானும் கொடுமை மிக்க மாந்தப் போலியரும் விலங்கு போலியரும், தாம் தாம் மேற்கொண்ட வினைகளான் அழிந்து படுவாரும் எக்காலத்தும் உளராவர்; அவ்வகையினர் தம்தம் நிலைகளினின்று உய்ந்து போதல் விரும்பி, அவர்செலும் வழிநிலைகளை முட்டறத் தெரிவிக்கும் பல்வகை நூல்களை நுவலுதல், மெய்யறிவாற் கண்டுணர்ந்து அடங்கிநின்ற மேலோராகிய அவர் வினை ஆகும். ஊர் மக்கள் உண்ணுதற்குதவும் நீர்நிலைப் புறத்து, வரவும் போகவுமாகப் பல வழிகளையும் அமைத்துக் கொள்ளும் நீர் வேட்கை மிகுந்த மக்கள் போல்,அறிவு வேட்கை மிக்கு வருவார்க்கு அது தணிவித்துப் போக்குவிப்பது அவர் மேற்கொண்ட வினையின் கடப்பாடு ஆகும். அத்தகைமை சான்றவரே இவ்வுலகத்து என்றென்றும் உடலாலும் உணர்வாலும் வாழ்ந்து வருகின்ற தன்மையோர் ஆவர்.

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

அறிவுப் புலன் உழுது, வித்தி, விளைவித்துத் தானும் உண்டு, ஏனையோரையும் உண்பிக்கும் சான்றவர், இவ்வுலகத்து எந்நிலத்தும், எம் மக்கள் தொகுதியிலும், எவ்வகை ஆட்சியின் கீழிருந்தும், கடமையாற்றுந் தகைமையையும், அவர்தம் மெய்யானும், மெய்நூலானும் என்றென்றும் வாழும் வகைமையையும் விளக்கிக் காட்ட வெழுந்ததிப் பாட்டு.

பொண்மையும் போன்மைபும் மிக்க உலகத்துச் சான்றவர் தோற்றமும் இருப்பும் கடப்பாட்டால் உணரப்பெறும் ஆகையான், அவர்தம் கடப்பாடு யாதென்று உணர்த்தக் கூறியது இப்பாட்டு.

பொண்மை – பொய்மை போன்மை – போலிமை.

மக்களால் நாடுதல் பெறும் தன்மையாகலின் நாடு எனப்பட்டது. அது நலத்தானும் வளத்தானும் இயல்பாகித் தன்னை நாடுதல் செய்விக்கும் நிலம். தன்னைச் சார்ந்தார் வேறு நலனும் வளனும் நாடாமல் நிற்கத், தன்னை வளப்படுத்திக் கொள்வது நாடு என்பர் வள்ளுவர். 'நாடு என்ப நாடா வளத்தன'. நாடு – தொழிலாகுபெயர்.

பலவாக – பலவாகுக. நாடுகள் பலவாயினமையின் மொழிகளும் பலவாயின. பலமொழிகள் உள்ளடங்கிய நாடும், பல நாடுகள் உள்ளடங்கிய மொழியும் உளவாம் என்க. தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம், உருது, மராட்டியம், பிரஞ்சியம் முதலிய பலமொழிகள் உள்ளடங்கிய நாடு தமிழகம். இங்கிலாந்து, அமெரிக்கா, ஆத்திரேலியா, இந்தியா, இலங்கை முதலிய பல நாடுகள் உள்ளடங்கியமொழி ஆங்கிலம்.

ஆடமை கொடி – ஆடு கொடி, அமைகொடி என இரு தொகையாகக் கொண்டு, அரசு ஓச்சுதல் காலத்து ஆடு கொடியாகவும், அரசு ஒழிதல் காலத்து அமைந்த கொடியாகவும் பொருள் கொள்க. ஒரு கொடியின் இவ்விரு நிலைக்கு இடைப்பட்ட காலமே ஓர் அரசுக் காலம். அக்காலம் பலவாகுக என்பதாம்.

மாண் – பெருமை, சிறப்பு. மாணும் – சிறப்பினும், மக்கட் சிறப்பு நாகரிகம் என்க.

ஒழுகு – ஒழுக்கம், மக்கள் ஒழுக்கம் பண்பாடு என்க. ஒழுகினும் – ஒழுக்கத்தானும். –சொற்சிறப்பு முற்கூறப்பட்டது.

மக்கள் பலர் ஆக – அவ்வக்கால் பெற்ற நடைமுறைப் புறப்பாடு ஆகிய நாகரிகத்தானும், வழிவழிப்பெற்ற அகப்பாடு ஆகிய பண்பாட்டானும் மக்கள் பல பிரிவுகட்கு உட்பட்டவராவர். முந்நூற்றாண்டுக் காலப் புழக்கத்தில் ஆங்கிலரொடு புற நாகரிகத்தான் ஒன்று படினும், அகப் பண்பாட்டான் தமிழர் வேறுபடுதல் காண்க.

நிலத்தானும், மொழியானும், ஆட்சியானும், நாகரிகத்தானும், பண்பாட்டானும் மக்கள் பல்வேறு வகைப்பட்டவராவர். நிலத்தொடு மொழியும், மொழியொடு ஆட்சியும், ஆட்சியொடு நாகரிகமும், நாகரிகத்தொடு பண்பாடும் தொடர்புடையனவாகும். இவற்றுள், முன்னவை தழையத் தழையும் பின்னவை. முன்னவை குலையக் குலையும் பின்னவை.

இனி, ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ்வொரு வளம் இருத்தல் உண்மையின், ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ்வொரு மொழி உண்டாம். அவ்வவ்வெல்லை தடவும் மொழி தூய்மை மிக்கிருத்தலும், அவ்வவ்வெல்லை கடவும் மொழி தூய்மை மிக்கழிதலும் இயல்பு. நெல்லைத் தமிழ் கேரளத்தும், ஆந்திரத் தெலுங்கு சென்னையினும் மிக்கழிதல் காண்க.

இவை போன்றே ஆட்சி, நாகரிகம், பண்பாடு முதலியவை ஒன்றொடு ஒன்று முட்டித் திரிந்து வேறுதல் இயல்பாம். இவை எல்லாமும் எத்திரிபுறினும், சான்றாண்மை எந்நிலத்தும், எக்காலத்தும், எம்மொழிக் கூட்டத்தும், எவ்வாட்சிக் காலத்தும், எவர் நாகரிகத்தும், எப் பண்பாட்டிடையினும் திரிபுறாது நிற்றல் தன்மையை விளக்கவே இத்திரிபுகள் வலியுறுத்தப்பட்டன.

எத்திசை – எம்மருங்கு.

திசை, திக்கு தூய தமிழ்ச் சொற்களே.
திசையச் செய்தலின் திசையாயிற்று.
திக்கச் செய்தலின் திக்கு ஆயிற்று.

திசைதல், திக்கல் தடுமாறல். மயங்கல். –வழிபுலப்படாத் தன்மை. திக்கு என்ற தென் சொல்லைத் தாம் கொண்டு, வடசொல் என்று வழக்கழித்து இழிவழக் காடுவர் ஆரியர்.

திகைதல்–திசைதல் ஒரு பொருட் பல சொற்கள்.

என்னோர் ஆயினும்–எத்திறத்தோர் ஆயினும். இன்ன நாட்டினர், மொழியினர், கொடியினர், அரசினர், மாணினர், ஒழுகினர்–என வரையறை தவிர்ந்த திறத்தோர்.

புலனும், உள்ளமும் – அறிவுணர்வும், உள்ளவுணர்வும். அறிவுணர்வு – ஐம்பொறிகளால் தனித்தனி அறியும் ஐம்புலன் உணர்வு. உள்ள உணர்வு – இவ்வைம்புலன் உணர்வும் முதிர்ந்து ஒன்று கூடியவிடத்துத் தோன்றும் மெய்யுணர்வு. ஐந்தும் ஒரே காலத்து, ஒரே அளவின், ஒரே படித்தாய்ப் பொருந்தாவாகலின் அவை மாறி மாறியும், குறைந்தும் கூடியும் பொருந்தும் தன்மை நோக்கி உள்ள உணர்வும் வேறுபட்டு விளங்கும் என்க. இவ் வைம்புலனறிவும் நிலத்தானும், மொழியானும், ஆளுமையாலும் தொடக்கத்தே வேறுபட்டு நிற்பினும், முடிவே இவ்வுலகத்துள்ள எல்லா உயிர்கட்கும் ஒன்றுபட்டு உள்வாங்கும் தன்மையது. நம் வாயால் இட்ட ஒலி, நம் காதால்

கதுவப் படுதல் போல், ஒரு பொறியால் எறியப்பட்ட உணர்வு இன்னொரு பொறியால் அறியப் படுதல் நிகழும். அதுபோலவே ஐம்புலனறிவும் ஒன்றுபட்டு உள்ளவுணர்வால் உள்வாங்கப்படும். அக்கால் உள்ளம் நுண்மை எய்தும். அந்நுண்மை சுரக்கச் சுரக்கப் புலன் உணர்வு வறக்கும். புலனுணர்வு வறளவே பொறி செத்துக காயும். அதன்பின் எதிரேறிப் பாய்ந்த உணர்வெல்லாம் உளவூற்றினின்று பொறிப் புலன்கள் வழி எதிரிறங்கிச் சாயும். அக்கால் பொறிகள் வழிக் கொள்ளப்படும் அறிவு ஒன்றுமில்லை; தள்ளப்படும் அறிவே மிகுதி என்க.

கையிறைவையுள் (Boring Pump) தொடக்கத்து ஊற்றப்படும் நீர், உள்நீர் மேலேறி வரத் துணை நிற்றலும், பின் ஊற்று நீர் தொடர்ந்து இறைவை வழி வெளியேறுதலும் போல்வன பொறிகள் உள்வாங்கிய புலனுணர்வும் (தொடக்கத்து ஊற்றும் நீர்) பின் அவை வழி, உள்ளம் வெளியேற்றும் மெய்யுணர்வும் (பின்வரும் ஊற்றுநீர்) என்றறிக.

முதற்கண் புலனறிவு மிகுத்தே உள்ளவுணர்வு மிகுமாகலின் புலனும் உள்ளமும் எனலாயிற்று.

பூணுதல் – பூட்டப் பெறுதல்.

(பூணப்பெறுதல் பூணும், அணியப் பெறுதல் அணியும் ஆகும். அணிதல் அடிக்கடி கழற்றப் பெறுமாறு ஒன்றை உறுப்பிற் கொளுவித்தல். பூணுதல் என்றும் கழற்றப் பெருவாறு ஒன்றை உறுப்பிற் கொளுவித்தல்.

ஆடை, வளை, முடி, மாலை, குப்பாயம், காலுறை முதலியன அணிவிப்பன.

கடகம், தோடு, மங்கல நாண், மணம், புகழ் முதலியன பூணுவன.

'மங்கல நாண் அணிதல்' எனல் பிழையான வழக்கு.

'மங்கல நாண் பூணுதல்' என்பதே தமிழ்ப் பண்பு வழக்கு; –அது கழற்றுதற்குறியதல்லதாகலின்.)

புலனும் உளமும் பூண்டார் – புலனறிவும், உள்ள உணர்வும் நிலை நிற்கப் பெற்றார்.

நிலத்து உயிர்க்கு – நிலத்தின் கண் வெளிப்போந்த உயிர் யாவினுக்கும். மாந்தர்க்கு மட்டுமின்றி, விலங்குகளுக்கும் சான்றோரே வழிகாட்டியாகலின்.

அளியின் இரங்கி – அருளால் இரங்கி. அருளல்–அன்பால் முதிர்தல். அறிந்தவிடத்துச் செலுத்தல் அன்பு. அறியாவிடத்தும் செலுத்துதல் அருள். அறியாவிடத்துச் செலுத்தப்படும் அருள், பின் அறிந்தவிடத்து அன்பாகக் குறுகுமோ என்பார்க்கு, அஃதன்று; அன்பிற்குரியர் தொடக்கத்து அறியாரேயாயினும் அவர்பால் முற் செலுத்துதல் அருளன்று; கண்ணோட்டம் என்க. மேலும் அறியாவிடம் முகநோக்கில்லா இடம் மட்டும் அன்று; அறியாமை மிக்க விடமுமாம் எனக் கொள்க.

புலத்துறுப்பு உய்க்கும் சான்றவர் – ஐம்புலவுணர்வினை மெய்யுணர்விற்படுத்தும் சால்பு மிக்கவர். உளர் – உளராக. சாலுதல் – நிறைதல் தன்மை. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன போலும் மீமிசைமாந்தத் தன்மைகள் நலியாது பொருந்தி நிறைதல்.

வெம்மை மாக்கள் – கொடுமை நிறைந்த விலங்கின் தன்மையர். வெம்மை – கொடுமை; கொடுமை – வளைதல் தன்மை. வெம்மை(சூடு) பட்டது கோடும் (வளையும்) ஆகலின் வெம்மைக் கருத்தினின்று கொடுமைக் கருத்து தோன்றியது. மாந்த நிலையினின்று கோணிய தன்மை நிறைந்த மாந்தப் போலிகள் – புலனறிவை உள்வாங்கி, அகத்தறிவை வெளிக்கொணராது, புலனறிவைப் புறஞ்சிதர்ந்து, அகத்தறிவை உட்புதைக்கும் அறியாமை மிக்கவர். ஏதங்கொண்டு ஊதியம் போக விடும் பேதையர் இவர்.

வினையழிவார் – இவர் பேதைமை நீங்கினும் வழிமாறியவர். ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையர் தம் அகமுனைப்பாலும், புறமுனைப்பாலும் தத்தமக்குற்ற வினைப்பாடுகளில் அழிந்து படும் தன்மையர்.

மும்மையும் உளர்: மூன்று காலத்தும் உளராவர். தீமை அன்றன்று தோன்றி, விளங்கி, அழிதலுறும். நன்மை அ ன் ற ன் று தோன்றி, விளங்கி, நிலைநிற்கும். தீமை மக்கட்கு இறங்கு படியும் நன்மை ஏறுபடியும் ஆகும். வாழ்நிலைப் படிகளுள் எதிரெதிராக வந்து கொண்டிருக்கும் தீயோரும் நல்லோரும் தத்தமக்குற்ற நல்லோராலும் தீயோராலும், ஆட்கொள்ளப்பட்டும் ஆட்கொளுவிக்கப்பட்டும் உய்கின்றனர். இனி, நன்மையும் தீமையும், உண்மையும் பொய்மையும்,

ஒளியும் இருளும் போல ஒருமையான அகப்புறமான இருமை நிலைகள். இவ்விரு படித்தான நிலைகளில் இருளினின்று ஒளிக்கு நடப்பதே வாழ்

வாகும். நடப்பு பின்னோக்கியதாயின் உயிர் பிறப்பினின்று உய்ந்து போதல் இல்லை என்க. இவ்விரு நிலைகளின் பிறவேறு தன்மைகளை மெய்ந்நெறி நூற்களில் விரிவாகக் கண்டுணர்க.

உய்யல் வேண்டி: உய்தல் விரும்பி – வேண்டுதல் – விரும்புதல்.

பன்னூல் நுவன்று: அறிவும், உளமும் புலப்படும் படியான பல் வகை நூல்களில் எடுத்துக் கூறி. நுவலல்–நூல்வழிச் சொல்லுதல்.

பாதை தெரித்தல் – அவர் செல்லும் அறவழிகளைத் தெளியக் கூறுதல்.

மெய்ந்நூல் நின்ற மேலோர் பாடு: மெய்ம்மையான நூற்களைக் கற்று, உணர்ந்து, அடங்கி நின்ற சான்றோர் வினைப்பாடு. படுதல் பாடு. படுதல் – அழுந்துதல் – அழுந்தி அறிந்த அறிவைச் செயற் படுத்தல்.

ஊருணி மருங்கில்...அது தணிப்பது அக் கடனே! ஊரால் உண்ணப்படுகின்ற நீர் நிலைக்குப் பல வழிகளையும் வகுத்துக்கொண்டு வரும் நீர் வேட்கை உடையவர்போல், அறிவு வேட்கை கொண்டு வருவோர்க்கு அறப்புனல் அருந்தக் கொடுப்பது அச்சான்றோரின் கடன்.

நீர் வேட்கை உடலது; அறவேட்கை உயிரது. உடல் கனலால் காய்ச்சப் பெறின் நீர் வேட்கை மிகும். உயிர் மறவுணர்வால் காய்ச்சப் பெறின் அறவுணர்வு வேட்கை மிகும். அறவுணர்வு – மெய்யறிவுணர்வின் பருநிலை.

இத்தகைவோரே என்றும் வாழுநர் என்று கூட்டுக.

இது, மெய்யறிவு வேட்கையினையும், அவ்வேட்கை தணிக்கும் சான்றோர் இத்தகைமையினர் என்பதையும், அவர் வாழும் நாடும், பேசும் மொழியும், ஏந்தும் கொடியும், பேணும் அரசும், கொளுவும் நாகரிகமும், தழுவும் பண்பாடும், தோன்றும் மன்பதையும் எத்தன்மையுடையவாயிருப்பினும் அவர் தாம் பிறருக்கு மெய்யறிவு கொளுத்தி உய்வித்தலையே தம் கடமையாகக் கொண்டிருத்தலையும், அதன் பொருட்டே அவர் முக்காலத்தும் வாழும் தகைமை பெற்றிருப்பதையும் எடுத்துக் கூறவந்த பாடலாகும். இது, பொதுவியல் என் திணையும், பொருண்மொழிக் காஞ்சி என் துறையுமாம்.

(வளரும்)

தொல்காப்பியத்தில் வழக்கு.

1. "பழம் பெருமை பேசுவதிலோர் மேன்மை இல்லை" எனப் புதுமைப் போக்கிகள் கூறிவிட முடியும். என்றாலும் கடந்த காலப் பெருமைகள் நிகழ்கால மாந்தனின் நெஞ்சத்துக்கு நினைவூட்டப்பட்டு நிலை தாழாமற் செய்யவும், நிலை தாழ்ந்து கிடக்கும் இவனுக்குப் பழைய வரலாற்றை நினைவூட்டிப் புத்தெழுச்சி உண்டாக்கவும், உலகத்திற்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் பழம் பெருமை பயன் படுமானால் பழம் பெருமை பேசுவதிலும் மேன்மை உண்டு. பழைய அறிஞர்களை நினைத்து இன்றைய நம் வறுமையுற்ற நம் அறிவையும் நினைக்கும் போது நம் நெஞ்சம் விம்மிப் பொருமுகிறது; நாணிக் குறுகுகிறது; இந்த விம்மலும் பொருமலும், நாணலும் குறுகலும் பழைய பெருமையைக் காக்கவும், புதிய பெருமைகளை ஆக்கவும் பயன் படுமானால், பழம் பெருமை பேசுவதிலும் பயனுண்டு. இது பேசிய அளவில் ஒடுங்கிவிடும் பழம் பெருமை அன்று; பேசிச் செயல்படுத்தும் பழம் பெருமை! நம் பெருமைகள் பழையன போதும் என்ற ஆறுதலைத் தராமல் புதியனவேண்டும் என்ற ஆர்வத்தைத் தருவதாக! இத்தகைய புது ஆர்வத்தைத் தரும் தொல்காப்பியப் பெருங் கடலுள் தோன்ற விளங்கிய ஒரு முத்தைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரை!

2. வழக்கு என்ற சொல்லிற்குச் செய்கை, ஈகை, இயங்குகை, அறவழக்கம், ஒழுக்கம், நெறி, உலக வழக்கு, செய்யுள் வழக்கு, இயல்பு வழக்கு, தகுதி வழக்கு எனப் பலபொருள் உண்டு*. இலக்கண உரையாசிரியர்களும், இலக்கிய உரையாசிரியர்களும் இன்ன பிற வழக்குகளையும் சுட்டிக் காட்டுகிறார்கள். அவற்றைச் சுருங்கிய அளவில் எடுத்துக்காட்டிப் பின்பு தொல்காப்பிய வழக்கை விரிந்த அளவில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

---

* கழக அகரமுதலி. ப: 754.

2–1. முகமன் வழக்கு: (உபசார வழக்கு) 'பொருள் செய்தாரைப் பொருள்' என்பது இதன் இலக்கணம்[1]. இதனை வடமொழியில் 'ஔபசாரிப்ரயோகம்' என்பர்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு[2].

ஏறு போன்றவனை ஏறு என்றலின் இது முகமன் வழக்கு (உபசார வழக்கு) என உரைவிளக்கம் தருவர் பரிமேலழகர். திருக்குறளில் 73, 254, 319, 383, 381, 582, 384 ஆகிய குறட்பாக்களின் உரையில் பரிமேலழகர் முகமன்(உபசார)வழக்கு என்பதைச் சுட்டிச் செல்கிறார். காரண கருமமாக முகவி(உபசரி)க்கப்படும் இந்த அமைப்பு[3] குறள் எண்: 63, 89, 201, 821, 860 ஆகியவற்றுள்ளும் காணப்படுகிறது.

2–2 அளவை வழக்கு (விவகார வழக்கு): 'Case' என்ற பொருளில் இன்றும் வழக்கு என்பது வழங்குகிறது. இதற்கு நேரான வடமொழிச் சொல் 'வியவகாரம்' என்பதாம். இதனையும் பரிமேலழகரின் உரைப்பாயிரம் நமக்குத் தருகிறது. "வழக்காவது ஒரு பொருளைத் தனித் தனியே எனது எனது என்றிருப்பார். அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேல் செல்வது. அது கடன் கோடல் முதற் பதினெட்டு பதத்ததாம்"– என்பது அவர் தரும் விளக்கம். அவையாவன: (1) கடன் வாங்குதல் (2) அடைக்கலமாகப் பொருளை வைத்தல் (3) உடையனல்லாதவன் விற்றல் (4) கூடி மேம்படுதல் (5) கொடுத்தவை மீண்டும் கொடாமை (6) கூலி கொடாமை (7) கட்டுப்பாடு கடத்தல் (8) விற்றுக் கொண்டும் உள்ளம் ஒப்பாமை (9) ஒப்பிப் பணி செய்யாமை (10) எல்லை வழக்கு (11) சொற் கொடுமை (12) தண்டக் கொடுமை (13) திருடு (14) வன்செய்கை (15) மாதரைக் கவர்தல் (16) மாதர் ஆடவர் தருமம் (17) தாய பாகம் (18) சூது[4].

1. வை. மு. கோ. திருக்குறள் பதிப்பு. ப: 283.
2. திருக்குறள் 381.
3. ஏது பயனாக ஓதப்படல். கருவியே கருத்தா ஆதல், ஒன்றன் இயல்பை மற்றொன்றின் மேல் ஏற்றல், காரியத்தைக் காரணமாக உபசரித்தல்–திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு கி.வா.ஜ. பக்: 204
4. வை. மு. கோ. திருக்குறள் பதிப்பு. ப: 3

2-3 இழிசினர் வழக்கு: உரையாசிரியர்களால் ஆங்காங்கே சுட்டப்படும் வழக்கு இது. சொல்லதிகாரம் 17-ஆம் நூற்பா உரையில் பழைய உரைகாரர் ஒருவர் 'இழிசினர் சோற்றைச் சொன்றி என்றலும் குழுவின் வந்த குறுநில வழக்கு[5]--எனக்குறிப்பிடுகிருர். இழிசினர்--நாகரிகம் பற்ருப் புன்புலே மாக்கள்.

2-4. இயல்பு வழக்கு: தகுதி வழக்குப் போலாது எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளே அச்சொல்லாற் கூறுதலின்[6] இயல்பு வழக்கு எனப்பட்டது.

2-5. தகுதி வழக்கு: இப்பொருளே அறிதற்கு அமைந்து கிடந்த இச்சொல்லால் கூறுதல் தகுதியன்று வேருெரு சொல்லால் கூறுதல் தகுதியெனக் கருதிக் கூறுதலின்[7]--தகுதி வழக்கு எனப் பகுக்கப்பட்டது.

2-6. வழக்கு உரைமுறை(வாசகம்): 'உவமத் தொகையே உவம இயல்'-- எச்ச 18-ஆம் நூற்பாவிற்கு விளக்கம் கூறப் புகுந்த நச்சி ஞர்க்கினியர் 'வழக்கு வாசகம்' என்பதைக் கையாளுகிருர்.

[வேல் உண்கண் என்பதற்கு] 'வேலினது கொலேத் தொழிலே ஒக்கும் கண்ணென்றவாறு காண் என ஒப்பென்னும் வழக்கு வாசகத் தால் செய்யும் என்னும் குறிப்பு முற்று வாசகந்தோன்ற உணர்த்துது[8] என்பது அவர் குறிப்பிடும் இடம்.

உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்பனவற்றைக் கட்டுரை அளவையாட(விவாதிக்க)ப் போகின்றது ஆகலின் ஈண்டு ஆராயப்பட வில்லே.

3. தொல்காப்பியப் பாயிரம்: ஒரு சில பொருள்களின் வன்மை. மென்மையை எதிர் மறையில் நினைத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள லாம். தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனர் பாயிரம் கிடைக்காமல்

---

5. சொல்லதிகார உரைக் கோவை. ப: 98
6, 7. நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை. பக்: 209
8. சொல்லதிகாரம்: நச்சினர்க்கினியம் தஞ்சை சரசுவதி மகால் பதிப்பு. பக்: 397

போயிருந்தால்-தொல்காப்பிய வரலாற்றுச் செய்திகள் இருளில் மூழ்க வாய்ப்பேற்பட்டிருக்கும்; தொல்காப்பியனின் வரலாறும் குழப்பப் புகை மண்டலத்தில் குடியிருந்திருக்கும். அத்தகு நிலைகள் ஏற்படாமல், விளக்கேற்றி வைத்த பெருமை பனம் பாரனாரைச் சாரும்.

பாயிர இலக்கணம் பேசப்படாத நூலுக்கு-ஒரு பாயிரம்; தனிநூல் எதுவும் செய்யாத [குறுந். 52-ஆம் பாடல் தவிர] பனம்பாரனார் அதன் ஆசிரியர்; எல்லையில்லாத உலகில் தமிழருக்கு எல்லை குறிப்பது அதன் நோக்கம்; என்றுமுள தென்றமிழ்க்கு இலக்கணஞ் செய்த தொல்காப்பியனைப் பாராட்டுவது அதன் உள்ளடக்கம்-தொல்காப்பியப் பாயிரம் தொல்காப்பியத்தை அறிய ஒருகருவி என்பதைவிடத் தொல் காப்பியனை அறிய ஒரு கருவி என்பதே மிகப் பொருத்தம்.

'வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி'

என்பது பாயிரத்துள் வருந்தொடர். இதனுள் வரும் 'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்'- என்பதற்கு உரைகாரர்கள் தரும் விளக்கங்கள் பலப்பல. அவற்றினை இங்குச் சுட்டிக் காட்டி 'வழக்கு' என்பது எதனைக் குறிக்கிறது என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் கருப் பொருள்.

பலவகைக் கருத்துகள்

3-1. இளம்பூரணர் கருத்து: 'தமிழ் மொழியினைக் கூறும் நன் மக்களான் வழங்கும் வழக்கும் செய்யுளுமாகிய இரு காரணத்தானும்'-

3-2. நச்சினார்க்கினியர் கருத்து: தமிழைச் சொல்லும் நல்லாசிரியரது வழக்கும் செய்யுளுமாகிய அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளுகையினாலே.

3-3. சிவஞானமுனிவர் கருத்து: தமிழ் மொழியினைக் கூறும் நல்ல உலகத்தின் வழங்கும் வழக்கினையும் செய்யுளினையும் ஆராய்ந்த பெரிய காரணத்தானே.

3-4. அரசஞ் சண்முகனார் கருத்து: தமிழ்மொழியைக் கூறும் நல்லாசிரியரது வழக்குஞ் செய்யுளுமாகிய அவ்விரண்டிடத்துள்ள.

3-5. வழக்கு என்பது வடமொழியிலுள்ள உலகியல் (லௌகீக (சமற்) **Laukika-worldly terrestried**) சந்தஸ்(சமற்) **Chandas-piled with metres)**[9] அல்லது 'வைதிகம்' என்பவற்றை நோக்கிச் செய்யப்பட்டது எனபாரும் உளர்[10].

3-6. பாயிரத்தில் வரும் செய்யுள் என்பது சான்றோர் செய்யுளை யும், வழக்கு என்பது சான்றோர் வழக்கையும் குறித்து வந்தன என்ப தில் பெருங்கருத்து வேற்றுமை இல்லை. சேனாவரையரும் இக்கருத்தி னரே என்பது சொல் 17-ஆம் நூற்பா உரையால் தெளிவாகிறது. *'அன்ன பிறவும்' 97* தொல்சொல் உரையால் தெய்வச் சிலையாரும் இக் கருத்தினரே என்பது உறுதியாகிறது.

'செய்யுளாவது பாட்டுரை நூலே' வாய்மொழி பிசியே அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்'- (தொல்-1336) என்னும் செய்யுளியல் நூற்பாவில் கூறிய ஏழு நிலமும் அறம் முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். இந்த விளக்கத்திற்குப் பிற உறையாசிரியர்கள் முரண்படும் இடம் பெரும்பாலும் இல்லை.

4-1. தொல்காப்பிய நூற்பாக்களை மூன்று வகையில் நாம் பகுக்கலாம்.

1. செய்யுளுக்கே உரியன
2. வழக்கிற்கே உரியன (505-510)
3. செய்யுள்-வழக்கு இரண்டற்கும் பொதுவாயின

(-1591. பேரா)

அவற்றுள் செய்யுட்கே வருவன எனத் தொல்காப்பியரால் விதந்து கூறப்படுவன: இவை:

1. நீட வருதல் செய்யுளுள் உரித்தே - 208
2. பலவற் றிறுதி நீடுமொழி உளவே
   செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான - 213
3. அன்று வருகாலை அ ஆ வாகுதலும்
   ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
   செய்யுள் மருங்கில் உரித்தென மொழிப - 258

9. Sanskrit-English Dictionary by williams. (Page 405, 1397)
10. இலக்கணச் சிந்தனைகள். பேரா. வையாபுரிப்பிள்ளை. பக்: 9.

4. செய்யுள் மருங்கில் வேட்கை என்னும்
ஐஎன் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும் – 288

5. விண்ணென வரூஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில் வடுகாலை – 305

6. இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான – 316

7. பொன்னென் கிளவி ஈறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகரம்
செய்யுள் மருங்கில் தொடரிய லான – 356

8. அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான – 481

9. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே – 234

10. இன்றி என்னும் வினையெஞ் சிகரம்
நின்ற இகரம் உகர மாதல்
தோன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே – 237

எனப் பத்து இடங்களிலும்,

சொல்லதிகாரத்தில்:

1) முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே – 522

2) இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே – 501

3) பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே – 594

4) குஐஆன் என வருஉம் இறுதி
அவ்வொருஞ் சிவணும் செய்யு ளுள்ளே – 592

5) ஆ ஒ வாகும் பெயருமா ருளவே
ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே – 680

6) இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கின் தோன்றலான – 681

7) பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆஒ வாகும் செய்யு ளுள்ளே – 696

8) ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும் – 697

9) இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே – 880

என ஒன்பது இடங்களிலும், பொருளதிகாரத்தில் செய்யுளியல் முழுதும் செய்யுளுக்கு உரியனவாய்த் தொல்காப்பியரால் பேசப்படுகின்றன. ஆக, தொல்காப்பியரால் செய்யுட்குரியன என விதந்து கூறப்படுவன ஏறக்குறைய 200 நூற்பாக்கள் (எழுத்து 10, சொல்லில் 9, பொருள் செய்யுளியல் 181) இவை அவர்க்கு முன்பிருந்த இலக்கிய வழக்கினின்று அல்லது செய்யுள் வழக்கினின்று எடுத்துக் கொண்டவையாகும்.

4–2. தொல்காப்பியத்துள் பிறரைச் சுட்டிக் கூறும் நூற்பாக்கள்-'என்ப' 'என்மனார்' போன்றவை287[செய்யுளியல்(241–181–60) 60 நூற்பாக்கள் உள்ளிட்டு].இந்த 287 நூற்பாக்களும் அவர்க்கு முன்பிருந்த இலக்கண வழக்கினின்று எடுத்துக் கொண்டவையாகும். ஆக மொத்தம் 487 நூற்பாக்கள் செய்யுள் வழக்கை–அடித்தளமாகக் கொண்டெழுந்தவை என்பது புலனாகின்றது. இதனின்று 487 நீங்கலாக உள்ள 1610-487–1123 நூற்பாக்கள் வழக்குக்கும், அல்லது வழக்கு, செய்யுள் இரண்டிற்கும் பொதுவானவை என்பது பெறப்படும்.

ஆக இவை செய்யுட்கே எனத் தொல்காப்பியரால் விதந்து கூறப்பட்டவை கொண்டும்,பழைய இலக்கண ஆசிரியர் உரைகளைச் சுட்டிக் காட்டுவதைக் கொண்டும் நாம் ஒரு முடிவுக்கு வர இயலும். அதாவது பாயிரத்துள் வரும் செய்யுள் வழக்கு என்பது இலக்கிய மொழியைக் (Literary language) குறிக்கிறது என்பதே.

[வளரும்]

ஒரு சொல்

–புலவர். சி. சத்திய மூர்த்தி, கீ.க. தே (B.O.L.)
தமிழாராய்ச்சித்துறை, கேரளப்பல்கலைக்கழகம்.

"...மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!
தாழிருங் கூந்தல் தையால் நின்னை..."

நிரை நிலைமாடத்து நிலாமுற்றத்தில் புதுமணப்பெண்ணாகிய கண்ணகியொடு இன்பம் துய்த்த கோவலன் அவள்முகம் பார்த்துப் பாராட்டும் அழகிய பகுதிதான் இது. இளங்கோவடிகள் இயற்றிய மேற்கண்ட சிலப்பதிகார அடிகள் இன்று இலக்கிய மேடைகளிலும் கட்டுரைகளிலும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன. இவ்வடிகளின் சுவையைக் கேட்டபின்னர் சிலப்பதிகாரத்தைப் படிக்கத் தொடங்கியவர்களும் இருக்கின்றனர். பாவியத்தில் வரும் இவ்வடிகள் சிலப்பதிகாரம் முழுமையினதும் ஓசைநயம், கற்பனைவளம், பொருளாழம் ஆகியவற்றைத் தெள்ளத்தெளிய முதலிலேயே நமக்குத் தெரிவித்துவிடுகின்றன.

இப்பகுதியில் கோவலன், தான் கண்ணகியிடம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றுத்துய்த்த ஐம்புல இன்பங்களையும் முறையே மாசறுபொன், தேன், கரும்பு, காசறுவிரை, வலம்புரிமுத்து ஆகியவை தரும் இன்பங்களோடு ஒப்பாகக் கூறியுள்ளான் என்பது அடியார்க்கு நல்லார் கூற்று. தனக்கு இன்பந் தந்துநின்ற கண்ணகியை இன்சுவைதரும் "தேனே!" என்று கோவலன் விளித்திருந்தாலுஞ்சரி, உரையாசிரியர் கூற்றுப்படி அவள் மொழியினிமைக்கே தேனை ஒப்பாகக் கூறியிருப்பினுஞ்சரி, தேனைப்பற்றிக் கூறிய கோவலன் தேனைச் சுவைத்தவனா? என்பதுவே இங்கு ஆய்வதற்கு உரியது.

கோவலன் கடைப்பிடித்த சமணசமயத்தைச் சேர்ந்தோர் இல்லறத்தார் எனினும் துறவறத்தார் எனினும் தேன்சுவைத்தலைக் கரிசுச் (பாவச்)செய்கையாகக் கருதுபவர்கள். தண்ணீரொடு கலந்த தேனும் கள்ளுக்குச் சமமானது என்பது சமணர் கொள்கை. கோவலன் கண்ணகியோடு மதுரை செல்லும் வழியில் ஏற்படும் ஏதங்களைக் கூற வந்த கவுந்தியடிகளும்,

"... ... ... ஆங்கண்
கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்
அடங்கா வேட்கையின் அறிவஞர் எய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும்
... ... நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பு..."
[சிலம்பு: ௧0, அக-அ௫, கக-கஎ]

என்றுதான் அறிவுரை பகருகிறார். முதன்முதலில் கண்ணகியொடு தன்னைத் தொழுத கோவலனைப் பார்த்ததும்,

"...பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையூர்... ..." [சிலம்பு: ௧0: சஎ-சஅ]

என்றுதான் கவுந்தியடிகட்குக் கேட்கத் தோன்றிற்று. எனவே, கோவலன் அருகதேவனின் திருமொழியினின்றும் வழுவாத நோன்பினன் என்பது புலப்படும். துறவாது நோன்பு காக்கும் "சாவக நோன்பி" [சிலம்பு, ௧௧: ௧அ] ஆகிய கோவலன் தேன் சுவைத்திருக்கமாட்டான். கண்ணகியொடு ஐம்புல இன்பத்தில் மூழ்கிய மயக்கத்தில் இருந்த கோவலன், தான் சுவைக்காத-ஆனல் பிறர் சுவைத்து இனியது என்று சொல்லக் கேள்வியுற்ற - தன் கொள்கைக்கு மாறான ஒன்றைக் கூற முற்பட்டு விட்டான் என்று காட்டுவது இளங்கோவடிகள் நோக்கமாகலாம். இன்பத்தின் மேலிருந்த அடங்கா வேட்கையினல் "அறிவஞர் எய்தி"த் "தேனே!" என விளித்துவிட்டான் கோவலன். ஐம்புல இன்பநுகர்ச்சி மாந்தனிடம் நிலைதடுமாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனை இளங்கோவடிகள் இந்த ஒருசொல் வாயிலாக எடுத்துக் காட்ட நினைத்திருக்கலாம். உயர்ந்த புலவர்தம் கையில் ஒருசிறு சொல்லும் ஒப்பற்ற கலைத்திறனைக் காட்டும் கருவியாகிவிடுகின்றது என்பதற்கு இதுவே சான்று. O

ம. இலெ. தங்கப்பா.

ஈகம் அன்று; அறிவியல்!

உலகில் பிறந்த ஒவ்வொரு மாந்தனும்
உலகில் பயனுற ஒவ்வொரு வகையில்
முயல்தல் வேண்டும். முயலா திருத்தல்
பெரும்பிழை யாகும். பிறழ்ச்சி இல்லா
மெய்ம்மை இதுவாம்.
அருளோ, தொண்டோ அன்றிது; கடமை!
அறமோ ஈகமோ அன்றிது; அறிவியல்!
எவ்வா றென்னில்,
உலகிற் பிறந்துள ஒவ்வொரு மாந்தனும்
உலகி னின்றும் பெறுவன பலவாம்.
பெறுவன உளவேல் கொடுத்தலும் உளவே!
அதுநினை யாமல்,
''உலகில் பிறந்தோம்; உடலினை வளர்ப்போம்.
இருப்பன யாவும் நுகரத் தானே!
கிடைப்பன அனைத்தையும் நுகர்ந்து தீர்ப்போம்.
பிறரைப் பற்றி நமக்கேன் கவலை?
உலகைப் பற்றி நமக்கேன் அக்கறை?
இருக்கும் நாள் சில இன்பம் பலப்பல.
இன்பம் விழைதல் உயிரின் வேட்கை.
பிழையிதில் உண்டோ?
அறம், அருள் என்றும் பொது நலம்- என்றும்

பிறர்க்கென வாழ்தல் பெருமை என்றும்
ஒழுக்கம் என்றும் கட்டுப்பா டென்றும்
கழுத்தை நெரிக்கும் கொள்கைகள் எதற்கு ?
நெஞ்ச விருப்பில், நினைத்ததைச் செய்வதில்
அஞ்சல் எதற்கு ?
எத்தனை நுகர் பொருள் உண்டோ அனைத்தும்
பெறுவதே இன்பம்; கொடுப்பது துன்பம்''
எனறிவ் வகையில் எண்ணும் சிலர்போல்
ஒவ்வொரு மாந்தனும் எண்ணத் தொடங்கினால்
என்ன ஆகும் உலக இயக்கம்?
பிறரின் உழைப்பால் பெறுவன யாவும்
இயற்கை தந்ததாய் எண்ணல் தகுமோ ?
தீங்கனிச் சோலை போன்றதிவ் வுலகம்.
வந்தவ ரெல்லாம் வயிறே குறியாய்
நிலம் கிளை றுமல் நீர்பாய்ச் சாமல்
கன்று பே ணுமல், காவல் இராமல்
கனிபறித் துண்டு நிழலில் தூங்கினால்
எத்தனை நாளைக் கிருக்கும் கனிகள்?
எத்தனை நாளைக் கிருக்கும் சோலை?
புதுக்கனி விளைக்கவும், புதுமரம் நடவும்
ஒவ்வொரு மகனும் உழைத்தா லன்றோ
பின்வரும் நாளெல்லாம் நிற்கும் சோலை.
ஒரு சிலர் உலகுக் குழைப்பதால் அன்றோ
பிறரும் இங்குப் பெரும் பயன் உறுவார்?
அந்தச் சிலரும் அகநிலை மாறி
இன்பம் பெறுவதே குறி என எழுந்தால்
கெடாது கொள்வோர் நிலை என் ஆகும்?
கெடாது நின்ற உலகமும் கெடுமே!
அதனால் தான் இதை அறிவியல் என்றேன்.
இந்த அறிவியல் அனைவரும் உணர்ந்தால்
அறம் செய் கென்றும் அருள்புரி கென்றும்.
பிறர் தொண் டென்றும் பேசவே வேண்டா.
அனைத்தும் தாமா அடையப் பெறுமே!
நினைத்துப் பாரீர் நெஞ்சுடை யோரே!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

புலவர் பெருமை

புலவர் : திருமேனி. நாகராசன், காரைக்கால்.

புலவர்கள் எல்லாரும் அரசர்களுக்குள் சண்டை மூட்டிவிடுவர் என்பதும் ஐயவர் கூற்றும். என்னை, தமிழ்ப் புலவரினும் விரிந்த பொது நோக்குடையாரை உலகில் காண்டல் இயலாதே. வேந்தர்கள் தம்முள் ஒற்றுமை பேணி நட்புரிமை கொண்டு வாழவேண்டும் என்பதே தமிழ்ப் புலவர் நோக்கமாய் இலங்கிற்றென்க. அதியமானிடம் இகலி எழுந்த தொண்டைமானிடம் சந்து செய்வித்தல் பொருட்டாக ஔவை எனும் பெண்பாற் புலவர் தாமே பன்னராகப் போயினரெனில் புலவர் பெருமக்கள் மன்னர்களுக்குள் ஒருமைப்பாடு காண எத்துணை முயன்றனரென்பது விளங்கும். இனி ஔவையார் சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் ஒருங்கிருந்தபோது அம் மூவரையும் பலபட வாழ்த்தி இரப்போர்க்கு வரையாது கொடுக்குந் தன்மையராய்ப் பன்னாள் வாழ வேண்டுமென விழைந்துபாடினர். என்னை,

[1] "இரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப் புணைபிறி தில்லை
ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்
யானறி யளவையோ விதுவே வானத்து
வயங்கித் தோன்று மீனினு மிம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநுந் நாளே"

என்பதனுல் அறியலாம். இன்னும் கோவூர் கிழார் என்னும் புலவர் சோழர் குடிப் பிறந்த நலங்கிள்ளி நெடுங்கிள்ளி என்பார் தம்முள் பகை கொண்டு எழுந்தபோது காலினும் கடிதிற் சென்று பொருது அழியாமே அவ்விருவர்க்கும் அறங்கூறி விலக்கினுர் என்னை,

1 புறம், பாடலெண்: 367.

[2] "இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேறலு மியற்கையு மன்றே, அதனாற்
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே"

இதனான் புலவர் பெருமக்கள் யாண்டும் ஒற்றுமையே வேண்டி நின்றதும், தம்நிலையின் இழிந்து பன்னராகப் போகி மன்னர்களுக்குள் ஒற்றுமை உருவாக்க முனைந்ததும், வையகம் முழுத்தும் போரின்றி வாழ்தலை தம் நோக்காய்க் கொண்டிருந்தனர் என்பதும் பெற்றாம். எனவே தமிழ்ப் புலவரை இழித்துக் கூறிய மூடர் முள்ளுடைக் காட்டில் முதுநரியாதல் முடிபாம்.

புலவர்க்குப் பாடத்தான் தெரியும்; ஆட்சியைப்பற்றி அவர்கட்கு என்ன தெரியும் என்பதும் பொருந்தாக்கூற்றே. என்னை, அரசாட்சி பற்றி அறியாப்புலவர் ஒருவரும் இலரே. அவர் அறிந்தது தம் பாட்டுடைத்தலைவனை மட்டுமன்றே. அவர் அவ்வரசனின் ஆட்சி முறைமையினையும் முட்டின்றி முழுமையும் அறிந்திருந்தாரென்க. அரசற்குப் பக்கம் இருந்து ஒல்லும் செங்கோல் நெறி காட்டிவித்தவர் புலவரேயாம். புரவலன் கரிகாலற்குப் புலவர் இரும்பிடர்த்தலையார் தலைமை அமைச்சராய் இருந்து, அரச நெறிமை அறிவித்தமையை அவன் வரலாற்றான் அறியலாமே. இனி அருந்தமிழ்வல்ல அறிவுடை நம்பி குடி வருத்தி முறையின்றி இறை பெற்றபோது அக்குடி வருத்தம் களையுநராகப் பிசிராந்தையார் பாண்டியற்கு அறவுரை அறைவாராயினர். என்னை,

¶ "காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே

---

[2] புறம், பாடலெண்: 45.

¶ புறம், பாடலெண்: 184

வாய்புகு வதனினும் கால்பெரிது கடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் விண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே''

என்பதனால் அறிக. இதனான் அரசற்கு அரசியல் அறிவுறுத்துபவர் அருந்தமிழ்ப் புலவர் என்பது போதரும். இனிச் சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானுடன் போரிட்டுத் தோற்று அவன் சிறையிடைக் கிடந்தபோது பொய்கையார் என்னும் புலவர் களவழி நாற்பது பாடிச் சோழனிடம் சேரனையே பரிசிலாகக்கொண்டு மீட்டார் என்பது வரலாறு. இதனைக் *''களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய வுதியன் கால்வழித்தளையை வெட்டியர சிட்ட பரிசும்'' எனவும் +''பொய்கை களவழி நாற்பதுக்கு வல்லவன் காற்றளையை விட்ட கோன்'' எனவும் இலக்கியங்கள் கூறுதலான் அறிக. இவ்வாற்றான் புலவர் அரசியலில் பெரும் பங்கு கொண்டிருந்தனர்; அரசியலை அரசர்க்கு அறிவுறுத்தினர் என்பன தெளிவாம். எனவே தமிழ்ப்புலவர் அரசியல் அறிஞராய் விளங்கினரென்பது அங்கை நெல்லிக்கனி.

இதுகாறும் கூறியவாற்றான் உலகின் உயர்தனிச் செம்மொழி யாகிய தமிழைக்கற்ற புலவர்க்குப் பெருமிதம் இருத்தல் இயல்பே யென்பதும், தமிழ்ப் புலவர் பிறர் வாழவே தாம் வாழ்ந்தாரென்பதும்,புலவர்கள் தம்முள் ஒருமைப்பாடுகொண்டு ஒத்த உணர்ச்சி உடையராய் உயர்ந்திருந்தனரென்பதும், அவர்கள் அரசர்கட்குச் சந்து செய்வித்தலையே தொழிலாகக் கொண்டிருந்தனரென்பதும் பெற்றாம். பெறவே தமிழ்ப் புலவர் தனித் தன்மை வானில் பரிதியென விளக்கமுறுதல் காண்க. எனவே காட்டிக் கொடுக்கும் தமிழர் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பாழ்பட்டுப் போதலை அறிக. இனியேனும் புலவர் பெருமை அறிந்து அவரைப் புரந்து புகழ் பெறுவாராக. (முற்றும்.)

* கலிங்கத்துப்பரணி

+ இராசராச சோழனுலா.

-புலவர்: தி. நா அறிவுஒளி.

படித்தவரின் பண்பில் கயமை.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

க.அ. நீயின் புளுகு மூட்டைக்கு, முன்னுள் இந்தியத் தலைமை யமைச்சரும் வரலாற்றுசிரியருமான நேருவின் கருத்தையே மறுப்பாக அளிக்கிறோம்:

"இந்தியாவில் ஆரியர்களின் வருகை புதிய இனப் பிரச்சினையையும் எழுப்பியது. போரில் தோற்கடிக்கப்பட்ட திராவிடர்கள் நீண்ட காலமாகப் பழக்கப்பட்ட சிறந்த பண்பாடு உடையவர்களாக இருந்தார்கள். ஆரியர்கள் தங்களை மிகவும் உயர்ந்தவர்கள் என்று கருதி நடந்தனர். இவ்விரு இனத்தவருக்கும் வேற்றுமை ஏற்பட்டது. சாதிப் பிரிவு ஆரியரையும், ஆரியர் அல்லாதவரையும் பிரித்துக்காட்டத் துணையாகக் கொள்ளப்பட்டது. ஆனல் சாதிப் பிரிவு ஆரியர்களையே தாக்கியது. பிராமணர்கள் எந்த அளவு இழிசெயல் புரிய முடியுமோ; அவ்வளவும் செய்தார்கள். பெரும்பாலோர் கல்வியறிவு பெற்றிருக்கவில்லை. சிறந்த குணங்களும் அவர்களிடமில்லை. ஆனுலும் பொதுமக்களின் மதிப்பைப் பெற்றிருந்தனர்." (The Beginning of the caste system.)

நேருவே கூறுகிறார்: ஆரியர்களிடம் பண்பாடுமில்லை; கல்வியறிவு மில்லை; இழிசெயல்களை எந்த அளவுக்குச் செய்யமுடியுமோ; அந்த அளவுக்குச் செய்தார்கள்—என்று! இந்த ஆரியர்கள்தாம் தமிழர்க்குப் பண்பாட்டைக் கற்றுக் கொடுத்தார்கள் என்று க. அ. நீ. கதை விடுகிறார்! க. அ. நீயின் இழிசெயல்—அறியாமை—பண்பின்மையை அளக்க இதைவிட வேறு சான்று வேண்டுமா?

உலக மொழிகள் யாவற்றிலும் தமிழ்ச்சொற்களும், தமிழ் இலக்கண முறைகளும், தமிழ் ஒலிகளும், தமிழ் மரபுகளும், தமிழிலக்கிய வேர் முதல் முறை—மரபுகளும் பரவிக் கலந்துள்ளன. வடமொழிக்கே அ—ஆ—முதலிய எழுத்துகளை ஆரியர் தமிழைப்பார்த்தே அமைத்தனர். பல மொழியியலறிஞர்களும், புலவோரும் இவைபற்றிப் பன்முறை எழுதிவிட்டனர். இவ்வளவுக்கும் பிறகு க. அ. நீ. பொய்ப் பொழிவு செய்வதை எவ்வாறு பொறுப்பது?

இவர் தவறாகக் குறிப்பிடும் பிற செய்திகள்:-

"பழமைமிக்க தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் சங்க இலக்கியத்தைச் சேர்ந்தது என்று சொல்லலாம்" (ப: 23)

"பத்தாயிரம் ஆண்டுகள் இயங்கி வந்த மூன்று சங்கங்களிலும், தேவதைகள், மன்னர்கள், ரிஷிகள் உள்பட 8,598 கவிஞர்கள் அங்கம் வகித்ததாகக் கூறப்படுகிறது." (ப: 23)

"மூவேந்தர்களும் தங்களுடைய மூதாதையர்கள் மகாபாரத யுத்தத்தில் பங்கு கொண்டதாகச் சொல்லிக்கொண்டதை, சங்க காலச் செய்யுளில் காணலாம்." (ப: 25)

"நெடுஞ்சேரலாதன் இன்னும் பல்வேறு போர்களில் வெற்றி பெற்றிருந்தான். அதன் விளைவாக, "அதிராஜன்" என்ற பட்டம் பெற்றான்," (ப: 25)

"செங்குட்டுவன் வடபாரதத்திற்குப் படை செலுத்திச் சென்று, அங்குள்ள மன்னர்களைத் தோற்கடித்து, பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குச் சிலை வடிப்பதற்காகக் கல் ஒன்றைக் கொண்டுவந்ததாகவும் கதை ஒன்று இருக்கிறது. இந்தக் கதையே சிலப்பதிகாரக் காவியத்தில் விரிவாகக் கையாளப் பட்டதா, அல்லது இதுவே சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்துச் சுருக்கப்பட்ட கதையா என்பது பற்றித் தீர்மானமாகச் சொல்லுவதற்கில்லை." (ப: 26)

"கரிகாலன் வைதிக மதத்தைப் பின்பற்றி வந்தான். பல்வேறு யாகங்கள் முதலியவற்றை அனுஷ்டித்து நல்வாழ்க்கை நடத்தினன். (ப: 29)

"ஆய் அந்திரன் என்ற மன்னன் பெயர் 'வீரன்' என்ற பொருள் படும். இது வடமொழிப் பதம்போல் தோன்றுகிறது." (ப:31)

"பாண்டியர், சோழர் இரு மன்னர்களின் உதவி கிடைத்தும், சேரனுடன் ஏற்பட்ட போரில் அதிகமான் வெற்றி அடையவில்லை. ஆகவே, அவன் சேரனுடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு, பின்னர் சேரமன்னனுக்காக போர் புரிந்து, போர்க் களத்திலேயே உயிர் இழந்தான். இவனுடைய மரணத்தைப்பற்றி ஔவையார் குறிப்பிடுகிறார். ஆனல், எந்தச் சேர மன்னனுக்கு இவன் அடங்கியிருந்தான் என்பது பற்றியோ, எந்தப் போரில் இறந்தான் என்பது பற்றியோ விவரங்கள் இல்லை." (ப: 32)

"விஷ்ணுவை மூதாதையாகக் கொண்ட இந்தத் தலைவர்கள், கடல் திரைமூலம் கிடைத்தவர்கள் என்று பொருள்படும் படியாக 'திரையர்கள்' என்று பெயர் கொண்டிருந்தார்கள்." (ப: 33)

"குழப்பம் மிகுந்த இந்த இடைக்காலத்தில்(களப்பிரர் காலத்தில்) புத்தமதம், ஜைனமதம் இரண்டும் தலைதூக்கி நின்றன. இந்தக் காலத்தில் தமிழ் இலக்கியம் செழித்து வளர்ந்தது. பதினெண் கீழ்க்கணக்கு என்ற இலக்கியத் தொகுப்பில் அடங்கிய நூல்கள் பெரும்பாலும் இந்தக் காலத்தில் இயற்றப்பட்டவை. தொல்காப்பியம் இந்தக்காலத்தைச் சேர்ந்தது என்று சொல்லலாம். சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இதையடுத்த பிற்காலத்தவை." (ப: 37)

"இதில் ஒரு அம்சம் கவனத்திற்கு உரியது. அதாவது, நாட்டு நிர்வாகத்திலும் சமுதாயத்திலும் பிராமணர்கள் பெரும்பங்கு பெற்றதையொட்டி, அதை எதிர்க்கும் வகையில் பிராமணரல்லாதார் ஒன்று சேர்ந்து 'ஜஸ்டிஸ் கட்சி' இயக்கம் தோற்றுவித்ததாகும். அரசாங்கத்தில் உத்தியோகங்கள் பெறுவதற்காக நிறுவப்பட்ட இந்தக் கட்சி விரைவில் சமுதாய ரீதியில் ஜனநாயகத்துக்கும் பாடுபடும் கட்சியாக மாறிற்று. இந்த நிலையில் ஏற்பட்ட மனக்கசப்பைச் சில நிர்வாகிகள் பயன்படுத்திக் கொண்டு, பகைமையை வளர்த்தார்கள். முற்றிலும் ஆதாரமற்ற சில தத்துவங்கள் தலையெடுத்தன. திராவிடம், தமிழன்

தெற்கு—என்ற தத்துவங்கள் ஒரு பக்கமும், ஆரியர்கள், சமஸ்கிருதம், வடக்கு—என்ற தத்துவங்கள் மற்ருெரு பக்கமும் இந்த வேற்றுமைகளுக்கு எல்லேகளாகக் கொள்ளப்பட்டன. இன்னும் ஒரு பிரிவினர், திராவிடம் பாரதத்திலிருந்து பிரிந்துவிட வேண்டுமென்று வாதாடுகிருர்கள். வரலாற்றின் அடிப்படையில் இத்தகைய இயக்கங்களேப் பற்றிப் புரிந்து கொள்வது கடினமல்லவென்ருலும், நாளடைவில் தாரதம்மிய உணர்ச்சி தோன்றி, அதன் பலஞக, நாட்டின் ஒற்றுமை குலேயாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாமென்று நம்பிக்கை கொள்ளலாம்.'' (ப: 70–71)

மேற்கூறிய பகுதியில் 'பூசி மெழுகுதல்' என்ற கலே எவ்வளவு திறமையோடு கையாளப்படுகிறது பாருங்கள்! பார்ப்பனர் பல்லாயிரமாண்டுகளாகத் தமிழினத்தை அடக்கி நசுக்கி உயர்ந்தோங்கிச் செம்மாந்து திரிந்ததை யாரே அறியார்? தம் உரிமையை நிலேநாட்டிக் கொள்ளத் தமிழர் முற்பட்டதை—முற்படுவதை—எவ்வளவு நயமாக, கரவாக க. அ. நீ. எதிர்க்கிருர்! ஆரியப் பண்பாடுகளேப் பார்ப்பனர் கைவிட்டுச் சீர்திருந்தி, நெஞ்சுமாறித் தமிழரோடு கலந்துறவாட இந் நூற்ருண்டிலும் முன்வரவில்லேயே! பண்டை வேதநெறியை உயிர்ப்பிக்கவும், உலகில் பிற்போக்கு நிலேயை நிலேநாட்டவும்தானே ஆரியர் பாடுபடுகின்றனர்! பெரியார் ஈ.வே.இரா போன்ருேர் அருந்தொண்டை இன்னமும் குறை கூறியும் பழித்தும், எதிர்த்தும் அழிவுச் செயல் செய்துகொண்டுதானே இருக்கின்றனர்!

ஆரியரைப் போற்றுவதையே தம் வாழ்நாட் கடஞகக் கொண்ட க. அ. நீ. இந் நூலில் ஆரியரை உயர்த்தி வலிந்து புகழ்ந்தெழுதிய இடங்கள் ஒன்றன்று; பல. ''யாகங்களேச் செய்வதிலும், ராஜ்ய விவகாரங்களே நடத்துவதிலும் பிராமணர்கள் அரசனுக்கு உதவி செய்து வந்தார்கள். குறிப்பாக நீதி நிர்வாகத்தில் அவர்கள் உதவி செய்தார்கள். உண்மையான பிராமணர்களிடையே உணர்ச்சிகள் புண் படாதவண்ணம் பார்த்துக்கொள்வதுதான் நல்ல அரசனின் லட்சணம்''

ஆரியர் மனம் புண்படாமல் அரசு நடக்க வேண்டுமாம்! இக்கால அரசியலாளர்க்கு இஃது அறிவுரை தரும் பகுதியா? இதுபோல் எழுதுவதை எவ்வாறு நாம் விட முடியும்? 'உண்மையான பிராமணர்' என்ற தொடரை ஆராயும்போது 'பொய்யான பிராமணர்களும்' இருப்பதாகத் தோன்றுகிறது? தமிழகத்தில் மனுநெறித் திணிப்பு அறக்

கேட்டுக்கு வழிசெய்தது. இதுதான் அறத்துறையில் ஆரியர் செய்த திருத்தொண்டு! ஆரியர்தம் கயமைகளைத் திருத்திக்கொள்ள இக்காலத்திலும் துணியாதது அவர்தம் மரபு வழியுரிமையை—பிறவிக்குணத்தையே—காட்டுகிறதன்றோ?

''அரசியல் கிளர்ச்சியின் பயனாக, தென்னகத்தில் நிகழ்ந்த முக்கிய விளைவு பிராமண சமூகத்தினர் சர்க்காரிலும் வெளியிலும் பெற்றிருந்த செல்வாக்கைக் குறைப்பதற்காகத் தோன்றிய பிராமணரல்லாதார்—அல்லது ஜஸ்டிஸ் கட்சி இயக்கமாகும். பிரிட்டீஷ் ஆட்சிக் காலத்தின் பிரபல அதிகாரிகளால் இந்த இயக்கம் ஆதரிக்கப்பெற்றது.''
(ப: 105)

''பிராமணர்கள் கல்வியில் சிறந்து இருந்தபோதிலும் வறுமை மிக்க வாழ்க்கையையே நடத்தி வந்தார்கள். மற்ற ஜாதியினர் அவர்களுக்கு நிலம், பொருள் முதலியவைகளைக் கொடுத்து உதவினார்கள். முக்கியமாக தனவந்தர்களும் மன்னர்களும், பிராமணர்களைப் போற்றி வந்தார்கள். விஷயங்களை எடுத்துச் சொல்வது, மக்களிடையே மத்தியஸ்தம் செய்து அமைதியை நிலைநாட்டுவது முதலிய பணிகளைச் செய்வதில் பிராமணர்கள் பொதுவாக எல்லோருடைய மதிப்பையும் பெற்றிருந்தார்கள். சிலர் அரசாங்க ஊழியர்களாகவும், பணியாற்றி வந்தனர். இவ்வாறு அரசாங்க ஊழியத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் வாழ்க்கை மற்றவர்களின் வாழ்க்கையைவிட வேறுபட்டுத்தான் இருந்தது.''
(ப: 121–2)

''உயர்குலப் பெண்கள் நல்ல செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார்கள்''
(ப: 122)

''அறிவில் தேர்ச்சியடைந்த பிராமணர்களைத்தவிர கோவில்களும் பொருள், நிலம் முதலிய மான்யங்களைப் பெற்றன.''
(ப: 124)

''எண்ணாயிரம் என்ற இடத்தில் வாழ்ந்த பிராமணர்கள் வர்த்தகத்தை மேற்கொண்டது ஒரு உதாரணமாகும்''
(ப: 125)

''ஜாதி, வர்க்கம் முதலிய வேற்றுமைகள் பொது வாழ்வுக்கான சமுதாய ஒத்துழைப்பைப் பாதிக்கவில்லை...ஆயினும், வகுப்பு அடிப்படையிலான போட்டிகள், தனித்து நிற்கும் உணர்ச்சி முதலியவைகளும் இல்லாமல் இல்லை. ஆனால், இவ்வுணர்ச்சிகளால், சமுதாயத்தின்

அமைதி குலையவில்லை. ரதக்காரர்கள் என்பது போன்ற கலப்பு சாதியினரின் கடமைகள், உரிமைகள் முதலியவைகள் பிராமணசட்ட நிபுணர்களால் நிர்ணயிக்கப்பட்டன. வலங்கை, இடங்கை என்ற இரண்டு சாதிப் பிரிவுகள் சோழர் காலத்தில் தோன்றின.''

''உயர் குலத்தில் பிறந்தவர்களில் சிலர் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை மேற்கொண்டார்கள் என்று கல்வெட்டுக்கள் மூலம் தெரிகிறது.'' (ப: 126)

''விலைமாதர்களும், நடனப் பெண்களும் சமுதாய அமைப்பில் ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தார்கள். மற்ற குடும்பப் பெண்களைக் காட்டிலும் இவர்களுக்குக் கட்டுப்பாடுகள் குறைவாகவே இருந்தன.'' (ப: 126)

''நிலமற்ற உழவுத் தொழிலாளிகள், அநேகமாக அடிமைகள் போலவே வாழ்ந்து வந்தார்கள். பொதுவாக, உயர்குலத்தோர்களுடைய வீடுகளுக்குச் சிறிது தூரத்துக்கு அப்பால் அமைக்கப்பட்ட சிறிய மண் குடிசைகளில்தான் இவர்கள் வாழ்ந்தார்கள்.'' (ப: 127)

''அந்தக் காலத்து கல்வி முறையைப்பற்றி ஆராயும்போது சமஸ்கிருத மொழியில் உயர்கல்வி போதிக்கப்பட்டது என்பதை அறிகிறோம். பல்வேறு கல்வெட்டுக்களில் சமஸ்கிருத மொழிக் கல்விக்கான மான்யங்கள் கொடுக்கப்பட்டதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.'' (ப: 138)

''மதுரையில் நிறுவியிருந்த உயர்கல்விமுறை பற்றி டி. நோபிலி என்ற கிறித்துவ பாதிரி 1610-ஆம் ஆண்டில் எழுதிய கடிதம் ஒன்றிலிருந்து விவரங்கள் கிடைக்கின்றன. அவர் கூறுகிறார், ''மதுரையில் பல்வேறு வகுப்புக்களில் கல்வி பயிலும் பத்தாயிரம் மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே பிராமணகுலத்தைச் சேர்ந்தவர்கள். இந்தக் குலத்தைச் சேர்ந்தவர்கள்தான் உயர்கல்வி பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள்.'' (இதுமட்டும் டி. நோபிலி குறிப்பு. க.அ.நீ மேலும் எழுதும்போது, 'ஆயினும், கல்வி பயில்வதற்கு மற்ற வகுப்பார்களுக்குத் தடை விதிக்கப்படவில்லை. 1625-ஆம் ஆண்டில் ஒரு பாதிரி எழுதியிருந்த கடிதத்திலிருந்து பறையர் குலத்தைச் சேர்ந்த ஒருவன் கல்வியறிவு சிறந்து விளங்கி சமஸ்கிருத மொழியில் புலமையும் பெற்றிருந்தான் என்று தெரிகிறது......'' (பக்: 140)

எனக் குறிக்கிறார். குழுகாயத்தில் எங்கோ ஒருவரிருவர் படித்ததை வைத்து ஆரியரல்லாதார்க்கு உண்மையான கல்வி வாய்ப்பு, இன்று கிடைப்பதைப் போலக் கிடைக்கவில்லையென்பதை யாவரும் அறிவர்.

"சாதிப்பிரிவினைகளுக்கு அப்பாற்பட்ட கீழ்த்தரமக்கள் பல்வேறு சிறிய பணிகளைச் செய்து வந்தார்கள். அவர்களுக்கும் கிராமப் பொது நிர்வாகத்திலிருந்து கூலி கொடுக்கப்பட்டது. இதுதான் ஆயகார் முறையின் ஆரம்பமாக இருந்தது." (ப: 143)

"கோவில், மடம் முதலிய ஸ்தாபனங்களுக்கும் பிராமணர்களுக்கும் சொந்தமான நிலப் பகுதிகளில் பண்ணையாட்களின் நிலை வசதியாகவே இருந்தது என்று சொல்லலாம்." (ப: 145)

"உயர்குலத்தோரின் உணவில் நெய் ஒரு முக்கியப் பகுதியாக இருந்தது." (ப: 145)

"பல்வேறு தொழில் முறைகளும், கைத்திறன் வேலை முறைகளும் சாதி அமைப்புக்களாகவும், வர்த்தகச் சங்கங்களாகவும் அமைந்தன." (ப: 145)

"1956-ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகள் மொழிவாரி ராஜ்யங்களாகத் திருத்தி அமைக்கப்பட்டதன் விளைவாக, ஏற்பட்டிருக்கும் பிரிவினை உணர்ச்சிமட்டும் கவலைதரும் விஷயமாகவே இருக்கிறது. இந்த உணர்ச்சி தமிழ் நாட்டில் தீவிரமாகக் காணப்படுகிறது. சமஸ்கிருத மொழியும், நாட்டின் வட பகுதியும், பிராமணர்களும் ஒன்று என்ற ஒரு தவறான எண்ணத்தின் அடிப்படையில் இந்த உணர்ச்சி தோன்றியிருக்கிறது. ஆயினும், இத்தகைய நோக்கத்தினால் ஏற்படக் கூடிய அபாயத்தைப் பற்றிய உணர்வே இதை அதிகம் வளராமல் தடுத்துவிடுமென்று நம்ப இடமுண்டு" (ப: 149)

"பிராமணர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், இந்திய ஆரிய பழக்கமான ஐந்து வகையான யக்ஞங்கள் நிறைவேற்றப்பட்டன. பிறப்பு, இறப்பு நிகழ்ச்சிகள் சம்பந்தமான சடங்குகள் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன." (ப: 151)

"சமயாச்சாரத்தின் உயர்ந்த கட்டத்தில், சங்க காலத்தில் தமிழ் நாட்டில் நிலவிய வழக்கங்கள் பெரும்பாலும் வட பாரதத்திலிருந்து வந்தவை. கிராம மக்கள், பழங்குடி மக்கள் முதலியவர்களிடையே

அந்தந்த மக்களுக்குரிய புராதன வழக்கங்கள் நிலவிவந்தன. ஆயினும், வடபாரத சமயாச் சாரத்திற்கு, தமிழகத்தில் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியில் நல்ல பலன் ஏற்பட்டிருந்தது." (ப: 151)

"திருப்பாணாழ்வார் தாழ்ந்த குலத்தில் பிறந்தவராதலால், நந்தனைப் போல இவருக்கு ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் செல்வதற்குத் தடை இருந்தது." (ப:156)

"இவர் இயற்றிய சிவஞான போதம் என்ற நூல், பன்னிரண்டு சம்ஸ்கிருத சூத்திரங்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது." (ப:160) [மறைமலையடிகளார் சிவஞான போதம் மொழிபெயர்ப்பு நூலன்று என்றும் அஃது தமிழரால் தனித் தமிழிலே மலர்ந்த மெய்யறிவு நூலென்றும் நிலைநாட்டியுள்ளமை இவண் கருதுதற்குரியது.]

"தமிழ் நாட்டில் சைவ மதத்தைச் சேர்ந்த சித்தர்கள் ஒழுக்கம் நிறைந்த மஹான்களாக விளங்கினார்கள். கிறித்துவர்களும். முகமதியர்களும் மதம் மாற்றம் செய்ய மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, சித்தர்கள் இவ்வாறு இந்து மதத்தின் அம்சங்களைத் தங்களுடைய பாடல்கள் மூலம் எடுத்துக்கூறினார்கள் என்று கொள்ளலாம்."(ப:161)

"இருபதாம் நூற்றாண்டில் வாழ்க்கை நிலையின் விளைவாக மதச் சடங்குகள் அவ்வளவாக அனுஷ்டிக்கப்படவில்லை என்றாலும், மக்களிடையே சமயாச்சார விஷயத்தில் அடிப்படை மாறுதல் எதுவும் ஏற்படவில்லை." (ப: 161-2)

'இலக்கியம்' என்ற தலைப்பில் வேண்டுமென்றே முரண்பட்ட செய்திகளை வலிந்து கூறியுள்ளார்:

"தமிழ் இலக்கண நூல்களில் மிகவும் பழமையான தொல்காப்பியம் இந்தக் காலத்தைச் சேர்ந்ததுதான். ஆயினும், அது சற்று பிற்காலத்தில் இயற்றப்பட்டது என்பதற்கும் அந்த நூலிலேயே சில சான்றுகள் இருக்கின்றன. சம்ஸ்கிருத இலக்கணத்தின் ஐந்திரம் என்ற பிரிவிலிருந்து தொல்காப்பியத்துக்கு விஷயங்கள் எடுக்கப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது." (ப: 170)

"சங்க நூல்களில் வடக்கத்திய சம்ஸ்கிருத பண்பாட்டின் சிந்தனைகளும், லட்சியங்களும் நிறைந்திருந்த போதிலும், அவைகள் வியப்பு அளிக்கும் முறையில் தனிப்பட்ட மொழிவளம் பெற்று விளங்கின." (ப: 120)

“மனு, கௌடில்யர், வாத்ஸ்யாயனர் ஆகிய சப்ஸ்கிருத புலவர் களின் நூல்களை நன்ருய்ப்படித்திருந்த ஒரு சமண ஆசிரியர் குறளை இயற்றியிருக்கலாம்.” (ப:171)

“மாணிக்கவாசகரின் பாடல்கள் ஆகிய திருவாசகம் 8-ஆம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் கிறித்துவமத உணர்ச்சிகளும் ஆங்காங்கே காணப்படுவதாக சிலர் கூறுகின்றனர்.”(ப: 175)

“ஒன்பதாம் நூற்ருண்டின் கடைசிப் பகுதியில் முத்தொள்ளாயிரம் என்ற காவியம் இயற்றப்பட்டது.” [??] (ப:177)

“கைலாசத்தைப் பற்றிக் கம்பன் விஸ்தரிப்பது, சோழநாட்டைப் பற்றி அவர் கொண்டிருந்த உருவகத்தின் பிரதிபலிப்புதான்.”(ப:178)

பிற்கால இலக்கிய வளர்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்ட க. அ. நீ. பாரதிதாசன் பெயரை மறந்தும் குறிப்பிடவில்லை! முற்போக்கு இலக்கியப் படைப்பாளர் ஆய்வாளர் பற்றி ஏதுமே குறிக்கவில்லை. எப்படியோ, மறைமலையடிகளார், திரு. வி. க. ஆகியோர் பெயரைக் குறிப்பிட்டு விட்டார்! எவ்வளவுதான் மறைக்க முயன்ருலும் இவ்விரு பேரறிஞர் தம் பெயரை அவர்களால் மறைக்க முடியாது!

“பல நூற்ருண்டுகளாக் சமீப காலம் வரை, தமிழகத்தில் தமிழ் மொழியுடன் சம்ஸ்கிருதமும் ஒரு இலக்கியமொழியாக வழங்கி வந்தது. தமிழ் இலக்கிய வடிவங்களைச் சம்ஸ்கிருத இலக்கியம் தொடர்ந்து பாதித்து வந்தது மட்டுமின்றி, சம்ஸ்கிருத மொழியிலேயே தமிழக ஆசிரியர்கள் பல இலக்கிய சிருஷ்டிகளையும் படைத்தனர். மற்ற மொழிகளையும் சம்ஸ்கிருதம் இவ்வாறு பாதித்து வந்தது.” (ப: 192) —இப்பகுதியிலிருந்து க. அ. நீ. அவர்களை இன்னுர் என இனங்கண்டு கொள்வது அரிய செயலன்று! வடமொழியை உலகமொழியென்று காட்டுவதற்கும், அஃதில்லாவிடின் தமிழ் ஆக்கம் இல்லையென்று போலிக்கதையை நிலைநாட்டுவதற்கும் முயல்கிருர் க. அ. நீ. இக் கயமையைக் கண்டிக்காமலிருப்பது அறிவுடைமையா?

பக்கம் 136, 137, 138, 133, 128, 129 ஆகியவிடங்களிலும், மற்றும் பலவிடங்களிலும் சாதி, மத, வேறுபாடுகளை ஏற்றிப்போற்றும் முறையில் பல செய்திகளை ஆசிரியர் க. அ. நீ. எழுதியுள்ளமை பொதுமையுணர்வுடைய தமிழர் நெஞ்சைப் புண்ணுக்குமிடங்களாகும்.

அந் நூலில் (?) இன்னும் பலப்பல செய்திகள் மறுத்தற்குரிய-வலிந்து கற்பனை செய்யப்பட்டவை உள்ளன. அனைத்தையும் குறித்துக் காட்டுவதானால் தனி ஆய்வு நூலே எழுத வேண்டியதாக நேரும். தமிழர் இத்தகையோர் எழுதும் நூல்களை ஆய்வு நோக்கில் நம்பாமலே படிக்க வேண்டும். இவர் (க.அ.நீ.)வகுக்கும் கால வகுப்பில் கூட எண்ணற்ற முரண்பாடுகள் உள்ளன. வரலாற்றுப்பேராசிரியர்கள் இந் நூல் பற்றித் தம் கருத்தைச் செலுத்துதல் மிக இன்றியமையாததாம்.

சாதி–மத–இன–குல–உணர்வுகள் மறுக்கப்படும் இப் புதுமை நூற்றாண்டில் அவற்றிற்கு அரண்செய்யும் முறையில் கருத்துரைக்கும் நூல் பண்பாட்டு, வரலாற்று நூலாகி விலைபோவது, இக் காலத்திலும் எவ்வளவு கல்லா மடவருளர் என்பதைக் காட்டும் சான்றாகும்.

தமிழ்ப் புலவோரும், மாணக்கரும், அறிஞரும் இனைய நூல்களைக் காணின் உடனுக்குடன் மறுத்து எதிர்ப்புக் காட்டுதல் இன்றியமையாக் கடனாகும். அறிவுத் துறையில் ஒழுக்கக்கேடு உருவாக இடந் தருதல் நேர்மையாளர்க் கழகன்று. ஆகவே புல்லியோர் பொய்மையைக் களைய நல்லோர் புரட்சியுளத்தோடு கிளர்ந்தெழல் வேண்டும்!

தென்மொழி கடலூர் 1-.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	6 உருபா	7-25 உருபா	9 உருபா
தனி இதழ்:	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

சிறப்புச் சொற்கள் சில.

போர்க்களம்: போர்க்களத்தைக் குறிக்க, சமம், பறந்தலை, அமர்க்களம், செருக்களம் எனப்பல சொற்கள் தமிழில் உள. போரில் எல்லாப் பொருள்களும் அழிந்து தரைமட்டமாகுவதால் சமம் என்றும், ஊருக்குப் புறம்பான வெள்ளிடையில் போர் நடக்குமாதலின் பறந்தலை என்றும், விருப்பத்தோடு உயிர் வழங்கும் இடமாதலின் அமர்க்களம் என்றும்,செருக்குணர்ச்சியோடு போர் செய்வராதலின் செருக்களம் என்றும் காரணப்பெயர் பெற்றிருத்தல் கூடும்.

அடிப்படை:– பண்டாரகர் வ. சு ப. மாணிக்கனாரின் 'எந்தச் சிலம்பு' எனும் நூல்.

பண்டாரம்: பண்டாரம் என்பது பல பொருள்கள் நிறைந்த சரக்கு அறைப்பெயர். அது முறையே, பல அறிவுப் பொருள்களை உள்ளத்தில் தொகுத்து வைத்த பேரறிஞனையும், அப்பேரறிவு காரணமாக உலகப் பற்றைத் துறந்த துறவியையும், அத்துறவிபோலக் கோலம் பூண்டவனையும், அக்கோலம் பூண்ட இரப்போனையும் குறித்தது.

தாராளம்: படைஞன் போரில் ஒருகால் தம் உயிரிழக்குமாறு பகைவரைக் கொல்லுந் தொழிலை அல்லது வெல்லுந்தொழிலை மேற்கொண்டிருப்பதனாலும் அவர்களின் நாட்டுத்தொண்டும் நிலையாமைச் சிறப்பும் நோக்கி அவர்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையினாலும், அவர்கள் பிறர் பொருளை விரும்பியவிடத்து அவரைக்கேளாமலே எடுத்துக் கொள்வது வழக்கம். இதற்குத் தாராளம் என்று பெயர். தார் என்பது சேனை, ஆளம் என்பது ஆளின் தன்மை. தாராள்–படைஞன். தாராளம்–ஒருவரைக் கேளாமலே அவர் பொருளை எடுத்துக் கொள்ளும் படைஞன் இயல்பு. ஒருவர்க்குரிய இடத்தில் அவரைக் கேளாமற் புகுவதும் தாராளம் எனப்படும்.

நொறுநாட்டியம்: மிக நுட்பமான அவிநயங்களுடன் நடனஞ் செய்தல் நொறுநாட்டியம் எனப்படும். வேண்டாத நுண்ணிய வினைகளைச் செய்யும் ஒருவனை நொறுநாட்டியம் பிடித்தவன் என்பர்

கட்டாயம்: ஒன்றைக் கண்டிப்பாய்ச் செய்து தீர வேண்டுவதைக் கட்டாயம் என்பர். கட்ட வேண்டிய ஆயம் கட்டாயம். கட்டுதல் செலுத்துதல். ஆயம், வரி. வரிகட்டுவது பொதுவாக மக்கள் விரும்பாததும் தவறாது செய்யவேண்டுவதுமான செயலாகும். வரிகட்டுவது போன்ற கண்டிப்பு கட்டாயம்.

அரவணைத்தல்: பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து தழுவுந்தொழிலிற் சிறந்தவை. இதனால் முதலாவது ஒருவரை ஒருவர் உடலால் கட்டித் தழுவுவதையும், பின்னர் உள்ளத்தால் ஒன்றித் தழுவு வதையும், அன்பாகப் பேணிக் காத்தலையும் குறிக்க அரவணைத்தல் என்னும் வழக்கு எழுந்தது. அரவு – பாம்பு; அரவணைத்தல்–தழுவுதல்.

துரை: துரை என்பது துர என்னும் பகுதியடியாகப் பிறந்து, தலை வன் அல்லது சிற்றரசன் என்று பொருள்படும் கொடுந்தமிழ்ச் சொல். துரத்தல்–செலுத்துதல் அல்லது நடத்தல். மேனாடுகளிலிருந்து இங்கு முதன்முதல் வந்தவர்கள் தலைவராகவும் அரசியலை மேற்கொண்டவராக வும் இருந்ததினால் அவர்கட்குத் துரை என்பது பொதுப்பெயராக வழங்கத் தலைப்பட்டது.

கொடும்பாவி கட்டி இழுத்தல்: மழை பொய்த்த காலத்தில், அதற்குக் காரணம் ஒரு கொடும்பாவி என்று கருதி, ஊருக்குள் மிகத் தீயவன் என்று பேர்பெற்ற ஒருவனைக் கட்டி ஊருக்கு வெளியே இழுத்துக் கொண்டு போய் உயிரோடு எரித்து விடுவது முதுபண்டை வழக்கம். இதற்குக் கொடும்பாவி கட்டி இழுத்தல் என்று பெயர்.

சம்பளம்: பழங்காலத்தில் சம்பளம் கூலமும் உப்புமாகக் கொடுக் கப்பட்டது. கூலம்–தவசம். கூலத்தில் சிறந்தது நெல்லாதலின், நெல்வகையிற் சிறந்த சம்பாவின் பெயராலும், உப்பின் பெயராலும் சம்பளம் என்னும் பெயர் உண்டாயிற்று. சம்பும் அளமும் சேர்ந்தது சம்பளம்.

பெண் கொடி: புல் பூண்டு செடி கொடி மரம் என்னும் ஐவகை நிலைத்திணை (தாவர) உயிர்களுள், பெரும்பாலும் மெல்லியதும், விரைந்து வளர்வதும், ஒரு கொள் கொம்பைப் பற்றிப் படர்வதும் கொடியே. பெண்ணைக் கொடியென்று சொன்னவளவிலேயே, அவள் ஆடவனிலும் மெல்லியள் என்றும், அவனிலும் விரைந்து வளர்பவளென்றும், ஒரு கொழுநனைத் துணைக்கொண்டே வாழ்பவளென்றும், மூன்று பெண் பாற் குணங்கள் குறிப்பாய் அறியக்கிடக்கின்றன.

அடிப்படை:– பாவாணரின் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்'
தொகுப்பு:– ப. தாயம்மாள் (மு.க) தமிழ்த்துறை,
கேரளப்பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

—மணிவேலன்—

எங்கே ஒருமைப்பாடு ?

குடியாட்சிச் சட்டமெனும் கோயிலிலே- ஒருமைப்பா
டென்கின்ற கொடிய பேயை
அடிமைகளாம் பதினேழு மாநிலத்தின் உரிமையாம்
மேடையிலே அமர வைத்துப்,
"பிடித்துவந்து மொழியுரிமை, அரசுரிமை, பண்பாடு,
பேச்சுரிமைப் பிடரை வெட்டிப்
படையலிட்டுப் பணிவோடே இந்தியிலே மறையோதிப்
பணிக !"வெனப் பாடம் சொல்லும்

வடநாட்டுத் தடியர்காள்! வாய்க்கொழுப்பால் முன்னொருகால்
நும்நாட்டான் வலிந்து பேசி
இடர்ப்பட்ட செய்தியினைச் சொல்கின்ற எம்நாட்டு
வரலாற்றை எங்கே வைத்தீர் ?
குடர்சரிந்தும், தலைவெடித்தும், காலொடிந்தும், கழுத்தொடிந்தும்
மாய்ந்திடவே குண்டால் சுட்டும்
பிடர்பிடித்தே இந்தியினைத் தள்ளுதற்குத் திரண்டுவந்த
பெரும்படையை மறந்தீர் போலும் !

வடக்கத்திக் குரங்கொன்று குல்லாயை அணிந்திட்டால்
யாமுமதை வைத்தல் வேண்டும் ?
தொடைக்குக்கீழ் தொங்குகின்ற குப்பாயம் அவனணிந்தால்
நாமவனைத் தொடர வேண்டும் ?
அடைதட்டி யவனுண்டால் சோற்றினைநாம் விலக்கிவிட்டே
அவன்போன்றே உண்ணல் வேண்டும் ?
மடைவாயில் கூச்சலிடும் தவளைமொழி யவன்பேச,
நாம்பேசி மகிழல் வேண்டும் ?

நாட்டிலுள தாய்மொழியை விட்டொழித்து நாய்க்குலைப்புக்
கொப்பான இந்தி தன்னை
எட்டினிலே படித்திடவும் வீட்டினிலே பேசிடவும்
வேண்டுமென எதிர்பார்க்கின்ற
கோட்டானின் குரல்கண்டு கொதிக்கின்ற மாணவரின்
படையணிமுன் குன்றும் தூளாம்!
வேட்டெஃகம் என்செய்யும்? வீணாகத் துஞ்சுபுலி
இடறிவிட்டு வீழல் வேண்டா!

'சிவசேனை' என்கின்ற பெயரோடு மராட்டியத்தில்
தமிழர்க்குச் செய்யும் கேட்டை
எவன்வந்து தடுத்திட்டான்? எதற்காக ஒருமைப்பா
டென்கின்ற ஏய்க்கும் பேச்சு?
"சவானெ"ன்பார் 'சவமா'கக் கிடக்கின்றார்! 'பட்டீ'லும்
படீரென்று தனது வாயைச்
சிவசேனைக் குண்டர்கட்குத் துணையாகத் திறந்திட்டார்!
சீ! சீ! சீ! சிறியோர் செய்கை!

தமிழென்றால் உயிரென்றும் தடையென்றால் தூளென்றும்
உரிமையினைத் தட்டிக் கேட்கும்
குமுகாயம் தனிற்பிறந்த தமிழகத்து மாணவர்காள்!
பொறுத்திடவோ? குட்டக் குட்ட
நிமிராது குனிவதற்கு நாமென்ன கோழைகளா?
அணிதிரண்டு நெல்லைக் குத்தி
உமிநீக்கி அரிசியினைச் சமைப்பதற்குக் காலமின்று
வந்ததென ஒருங்கு சேர்வோம்!

ஒட்டியொட்டி நாம்சென்றே ஒன்றாக வாழ்வதற்கு
நினைத்தாலும் உதைத்துத் தள்ளி
எட்டிநின்று கொழுப்போடு நமைப்பார்த்துப் பகடிசெயும்
வடவருடன் என்ன வாழ்வு?
வெட்டிவரச் சொன்னாலே கட்டிவரும் படையிருக்க
எதற்காக வீண்தயக்கம்?
'வெட்டொன்று துண்டிரண்டாய்ப் பிரிவினையே வேண்டு'மென
வடவர்க்கு விளக்கிச் சொல்வோம்!

சோம. தேவராசன், அறி. இ.

திரைப் படங்களில் ஆங்கிலத் திணிப்பு

இன்றையத் தமிழகம் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி வருகிறது. இந்தி ஆட்சி அலுவலகங்களில் புகுத்தப் படுவதையே நாம் எதிர்த்து வருகிறோம். அதே போதில், ஏமாறிய தமிழர் நாட்டில் வடமொழி(சமசுக்கிருத)த் திணிப்பும், ஆங்கில மொழித் திணிப்பும் வெற்றியோடு நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. தூய தமிழ் வளர்த்த மறைமலை அடிகள் இப்போது இல்லை; திரு. வி. க. இல்லை; பாரதிதாசன் இல்லை. தமிழரின் ஒரே கைவாளாகத் "தென்மொழி" மட்டும் தூய தமிழ் வளர்க்கும் தன் கொள்கையில் துவளாது வெற்றி நடை போட்டு வருகிறது. தமிழரின் எண்ணம், எழுத்து, பேச்சு அனைத்தும் இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்ப்பதிலேயே அமைந்திருப்பதால், ஆங்கில மொழியும், வட மொழியும் தமிழர் உணரா வழியில் திணிக்கப்பட்டு வருகின்றன. இக்கட்டுரையில் நான் ஆங்கிலத் திணிப்பு எவ்வகையில் வருகிறது, அதை எவ்வகையில் நாம் எதிர்க்க வேண்டும் என்பவை பற்றிய கருத்துகளை எடுத்துரைக்கப் புகுகிறேன்.

இக்காலத்து – நாட்டு மக்களிடையே கருத்துகளைப் புகுத்தும் இன்றியமையாக் கருவிகள் இதழ்கள், வானொலி, திரைப்படங்கள் ஆகும். இவை தம் கருத்துகளை எந்த வழியில், எவ்வகைச் சொற்களைப் பயன்படுத்தி வெளியிடுகின்றனவோ, அவையே மக்களின் மனதில் பதிகின்றன; அவை கற்றறிந்த மக்களின் அடிமனங்களில் ஆழப் பதிகின்றனவா, அவற்றை அவர்கள் ஏற்று அவ்வழி நடக்கின்றார்களா என்பது தனியே ஆராயப்படவேண்டும். ஆனால், கல்லாத மக்கள் பெரும்பாலோரிடத்தில் அவை பரவிப் பதிகின்றன என்பது வெள்ளிடைமலை. மேலே குறிப்பிடப்பட்ட மூன்று கருவிகளுள்ளும் மக்களிடையே தனியிடம் பெற்றுள்ளது திரைப்படம்.

தமிழகத்தில் திரைப்பட நிலையம் இல்லாத ஊர்கள் மிகச் சில எனலாம்; திரைப்படங்களைப் பார்க்காத மக்கள் மிகக் குறைவு. தமிழ்த் திரைப்படங்களும் கிழமை தவறாமல் வெளி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இவற்றின் இரங்கத்தக்க நிலை என்னவென்றால், தமிழ் மொழியையும், தமிழர் பண்பாட்டையும், இசையையும், கலையையும் மக்களிடையே பரப்ப வேண்டிய இப்படங்கள், தமிழருக்கு ஒவ்வாத பிற நாட்டாரின் உடையையும், மொழியையும், இசையையும் கண்களைத் திறந்து கொண்டே பின்பற்றுவதுதான்! இது கண் திறந்திருக்கும்போதே குருடனைப்போல் படுகுழியில் விழும் நிலையே ஆகும்.

அண்மைக்காலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ப்படங்கள் உடையைப் பொறுத்தவரை முற்றிலும் ஆங்கிலப் படங்களாகவே காட்சியளிக்கின்றன. இதுவரை ஆண்கள் மட்டும் ஆங்கிலேயரின் உடைகளில் (நீண்ட காற்சட்டை போன்றவை) காட்சியளித்தனர்; இப்போது கதையின் தலைவியராய் வரும் நடிகைகளும் காற்சட்டை அணிந்து காட்சி தருகின்றனர். உடலை மறைத்து அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குணங்களையும் கொண்டு, நற்றமிழ் மங்கையர் வாழும் தமிழகத்தில் வெளிவரும் தமிழ்ப்படத் தலைவியர் காற்சட்டையணிந்து தோன்றுதல் எவ்வளவு அருவருப்பாய் உள்ளது! இளையோரின் உணர்ச்சிகளைத் தூண்டி, வருவாய் பெருக்க வேண்டும் என்பதே அவர் தம் இழிந்த நோக்கம் என்பதில் ஐயமில்லை அல்லவா? ஒரு திரைப்படம் முழுவதிலும் பார்த்தால், அக்கதையின் தலைவி ஒன்று அல்லது இரண்டு காட்சிகளில்தான் தமிழகப் பெண்டிரின் உடையான சேலையணிந்து தோன்றுகிறாள் (மற்ற காட்சிகளெல்லாம் ஆங்கில உடையில்) எனின், அத்தமிழ்ப்படம் எப்படித் தமிழர் பண்பாட்டை உலகுக்கு உணர்த்தும்?

தமிழ்த் திரைப்படமொன்றைப் பார்த்த உருசிய, அமெரிக்க நாட்டவர் சிலர், "இப்படம் தமிழ்ப் பண்பாட்டையும், கலையையும் தெரிவிக்கவில்லையே! எங்கள் நாட்டுக் கலை, பண்பாடு, பழக்க வழக்கங்களைத் தானே தெரிவிக்கின்றது!" என்று கூறியதாய்த் தமிழ் இதழொன்று ஒருமுறை செய்தி வெளியிட்டிருந்தது. ஆம்! அவர்கள் கூற்று எண்ணிப் பார்த்தால் ஒப்புக்கொள்ளக்கூடியதே ஆகும்!

நடிகர்களின் உரையாடல் அடுத்து நம் எண்ணத்தை ஈர்க்கின்ற ஒன்று! சில ஆண்டுகளுக்கு முன்னால் வெளிவந்த தமிழ்ப்படங்கள்

கனல் தெறிக்கும் உரையாடல்கள் நிரம்பி; மக்கள் மனங்களைக் கவர்ந்தன. உரையாடல் புத்தகங்களைத் தனியே வாங்கிப் படித்து மகிழ்ந்தனர் மக்கள். தற்போது அந்த அளவுக்கு உரையாடல்கள் புகழ் பெறவில்லை என்றாலும், அவற்றின் தேவை குறையவில்லை. கதையை விளக்கும் உரையாடல்தான், மக்கள் எண்ணத்தில் பதிவது. இப்போது அந்த உரையாடல்களிலும் ஆங்கிலம் புகுந்து விட்டது. சில படங்களில் சில காட்சிகளில் நடிகர்கள் ஆங்கிலத்திலேயே உரத்த குரலில் (தமிழ்ப்படங்களில்தான்!) பேசுகின்றனர். கற்றறிந்த மக்களே நடிகர்கள் பேசும் ஆங்கிலச் சொற்கள் புரியாமல் விழிக்கும்போது, கல்வியறிவில்லா மக்களின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ? தமிழர்களின் உணர்ச்சிகளை எடுத்துக்காட்டத் தமிழைவிட, ஆங்கிலமோ சிறந்தது?

திரைப்படங்களின் தன்மையை உணர்த்துவது இசைதான். தமிழ்ப்படங்களில் இப்போது முத்தமிழ் இசையைக் காணோம்; பிறநாட்டாரின், குறிப்பாக, ஆங்கிலேயரின் இசைதான் கேட்கிறது. பாடல்களின் இசையமைப்பு (மெட்டு, பின்னணி இசை போன்றவை) அத்தன்மையிலேயே அமைக்கப்படுகிறது. இதையாவது பொறுத்துக் கொள்ளலாம் போலிருக்கிறது; இவர்கள் தமிழ்ப்படத்துக்கு ஆங்கிலத்தில் பாடல்கள் எழுதுவதை நோக்கும்போது!

தமிழ்ப் பாடல்களைக் கெடுத்து, ஆங்கிலத்தில் எழுதுவோரிலும் இரு வகையினர்! முதல் வகையினர் செந்தமிழும் முற்றும் அறியார்; சிறந்த ஆங்கிலமும் அறியார்! இவர்கள் குறைகுடம் தளும்புவதைப் போலும், நிலையற்ற மதியுடையோர் 'ஆற்றில் ஒரு காலும், சேற்றில் ஒரு காலும்' வைத்துக்கொண்டு குழம்புவதைப் போலும் பாதி ஆங்கிலச் சொற்களையும், பாதித் தமிழ்ச் சொற்களையும் (தமிழ்ப் பாடல் என்பதற்கு அதில் பாதியளவாவது தமிழ்ச் சொற்கள் இருக்க வேண்டுமன்றோ!) கலந்து திரைப்படப் பாடல்கள் எழுதுகின்றனர். இரண்டாம் வகையினர் தாம் தமிழில் பாடல்கள் எழுதினாலும், தமக்கு ஆங்கிலமும் தெரியும் என்ற செருக்கோடு, மற்றவருக்குத் தம் 'பெருமை'யைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று ஆங்கிலத்திலேயே அடிகளை அமைத்துத் தமிழ்(!)ப் பாடல்கள் எழுதுவோர். இவ்விரு வகையினரின் பொருளற்ற 'பிதற்றல்'களையும் கீழே காண்போம்!

கலந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தெளிவாகக் காட்டும் பொருட்டு, அவற்றை ஆங்கில எழுத்துகளிலேயே எழுதுகிறேன்.

"அன்னம் போன்ற Walking
அல்வா போன்ற Talking
போதும் இந்த College
எப்போ உங்க Marriage"

"Tea! Tea! Tea!
பார்த்தவர்கள் மயங்கி விழும்
Paris நகர Beauty
பாவையிவள் கணவருக்குச்
சமையலறையில் Duty"

"My friend நெஞ்சத்திலென்ன?
I know அஞ்சாதே கண்ணு!"

"Love Birds! Love Birds!
காதல் பறவைகளே!"

முதல் வகையினர் எழுதும் பாடல்கள் மேலே தரப்பட்டுள்ளவை. தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலத்திலேயே பாடல்கள் எழுதும் 'தமிழ்க் கவிஞர்'(!)களின் பாடலகள் கீழே தரப்படுகின்றன.

"One Boy! One Girl!"

"Oh! Little flower!
See your lover!"

"Come come Rosie!"

"Once a பாப்பா met a மாமா
எங்கள் Little Tourist Bus!
என்னடி பாப்பா சொன்னது டுப்பா
கன்னம் சிவந்தது What is this?"

"Multi colour! Modern girl!
Waiting for you! Pretty girl!
Stop! Listen! Proceed!"

"My name is Meera"

"It is time
The moon will shine!
The world is fine!
And you are mine!"

"A for Apple! B for Biscuit!
C for Chocklat! D for Daddy!"

தமிழ் எழுத்தே இல்லையே என்று திகைக்காதீர்கள்! தமிழ்ப் பாடல்கள் இந்த அளவுக்கு இழிந்து விட்டனவே என்று வருந்துங்கள்! அதிலும் குறிப்பாக இந்தக் கடைசிப் பாடலைப் பாருங்கள்! தமிழ்ப் படத்தில் ஆங்கிலம் கற்றுத்தரப் பயன்படும் இந்தப் பாடலை எழுதியவர் தஞ்சை வாணன் என்பவராம்; முதுகலை (M.A.) படித்தவராம்; தமிழைச் சிறப்புப் பாடமாகப் படித்தவராம். ஆங்கிலப் பாடல் எழுதுகிறார் தமிழ்ப் படத்துக்கு!

இந்த ஆங்கிலம் – தமிழ்ப்பட, நாடகத்தலைப்புகளிலும புகுந்து விட்டது. அவற்றின் பெயரைக் கேட்டு, தமிழ் நாடகங்கள்தாம் என்று நீங்கள் உறுதியாகக்கூற முடியாது. தமிழ்த்திரைப்பட உலகைவிட, தமிழ் நாடக உலகைத்தான்-ஆங்கிலத் தலைப்புகள் மிகுந்த அளவில் பிடித்தாட்டுகின்றன. 'Madras To Pondicherry' (இது தமிழ்த் திரைப்படத்தின் பெயர்தான்!) 'Mind is a Monkey', Madras by Night', 'C. I. D', 'Miss Janaki', 'Doll's house', 'Under-Secretary' இவையெல்லாம் தமிழ் நாடகங்கள்தாம்! ஆனால் தலைப்பில்தான் தமிழ் இல்லை!

சிலர் நகைச்சுவைப் பாடல்கள் எழுதுவதென்றால் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதுதான் என்று எண்ணுகின்றனர். அவர்தம் அறியாமைதான் என்னே! தமிழ்த்திரையுலகின் நகைச்சுவை அரசர் கலைவாணர் கிருட்டிணன் ஆங்கிலச் சொற்களைக் கலந்தா நகைச்சுவைப் பாடல்கள் பாடினார்?

திரையுலகப் பெருந்தலைகளே! தமிழை வாழவிடுங்கள்! தமிழை நீங்கள் வளர்க்காவிட்டாலும் தாழ்வில்லை; தமிழை அழிக்காமலிருங்கள்! தமிழ்ப் படங்களில் தமிழிசையையும், தமிழர் பண்பாட்டையும் காட்டி, தமிழரின் தனித்தன்மையை நிலை நிறுத்துங்கள்! பொதுமக்களே! காசொன்றே கருத்தென்று எண்ணி, கலையென்ற பெயரால், தமிழ்த் திரைப்படங்களை நச்சுப் பொய்கைகளாக்கும் சிலரை வெறுத்தொதுக்குங்கள்! தவறுகளைச் சுட்டிக் காட்டிப் பாடம் கற்பியுங்கள்! தமிழர்களே! ஆங்கிலமும், பிறமொழிகளும் ஒரு சிலரால் தவறானவழியில் திரைப்படம் முதலான பலதுறைகளிலும் திணிக்கப்படுகின்றன. தூங்காதீர்கள்! இறுதித் தமிழன் இருக்கும்வரை, குருதியில் செந்தமிழ் உணர்வு உள்ளவரை இவற்றை எதிருங்கள்! அப்போதுதான் தமிழ் வாழும்!!

0

நன்மை தீமை.

செவ்வேள்

நல்லவற்றை யேநினைந்து
நல்லவற்றை யேபுரிந்து
நாள்கடத்த நானிலமும் வாழ்த்தும் – நம்மை
நாடி வந்து தன்தலையைத் தாழ்த்தும் !

செல்லரித்த ஓலையெனத்
தேய்ந்துவிடும் வாழ்வதனைச்
செப்பமுற்ற கல்லெழுத்துப் போலே – நாம்
செய்ய வேண்டும் நற்செயல்க ளாலே !

நெல்வயலிற் புல்வளரும்
நீர்மடுவிற் சேறுறையும்
நீள்கடலில் முத்துகளும் உண்டு – மேல்
நீந்திவரும் வெஞ்சுறவும் உண்டு.

கன்மலையில் நீர்ச்சுனையைக்
காட்டுகின்ற வையகத்தில்
கண்ணிருப்போர் தீமைகளைத் தூற்றி – இன்பங்
கண்டிருப்பார் நன்மைகளைப் போற்றி !

காட்டுவழிச் செல்லுகையில்
கண்தெரியா முட்செடிகள்
காலடியை வந்துவந்து தீண்டும் – நம்
காலவற்றை எப்படியோ தாண்டும் !

வாட்டமுற்ற நாட்களிலே
வாழ்க்கையெனும் பாதையிலே
வந்துவந்து தீவினைகள் தூண்டும் – அவற்றை
வன்மையுடன் நாம்கடக்க வேண்டும்.

நல்லவரைக் காண்பதனால்
நல்லவர்சொல் கேட்பதனால்
நன்மைகளே நம்மகத்திற் படியும் – உடன்
நச்சுநினை வங்கிருந்தால் மடியும்

அல்லவரைக் காண்பதனால்
அல்லவர்சொல் கேட்பதனால்
அன்பறிவு பண்புநலங் குலையும் – உடன்
ஆக்கமிகு வாழ்க்கைவளந் தொலையும்.

விரல்விழி மங்கையர்!

தென்கச்சி. கோ. சுவாமிநாதன்.

தன் சொந்த ஊரிலிருந்து ஆயிரம் கல் தொலைவுக்கும் அப்பால் உள்ள மாசுக்கோ நகருக்கு அந்தப் புகை வண்டியில் பயணமானாள் இருபத்திரெண்டு அகவை நிரம்பிய அந்த இளம் மங்கை. 'உரோசா குலேசோவா' [Rosa Kuleshova] என்பது அவள் பெயர். 'நிசனி தாசில்' [Nizhni Tagil] என்பது அவளுடைய ஊர். மாசுக்கோ நகர அறிவியற் கழகத்தில், புகழ்மிக்க அறிவியல் அறிஞர்கள் இவளுடைய வருகைக்காக காத்திருந்தனர். அவளைக்கண்டு அறிவியலார் திணறுகின்றார்கள். வியத்தகு புதுமை ஒன்று அவளிடம் புதைந்து கிடந்தது.

விரல்களால் அவள் பார்க்கிறாள். அச்சிடப்பட்ட எழுத்துகளை, கண்களை மூடிக்கொண்டு, விரல்களால் தடவிப் பார்த்து அவள் படிக்கிறாள். நிறங்களைக்கூட கூறிவிடுகிறாள். இந்தத் திறமைக்கு என்ன விளக்கம் கூறுவது என்பது புரியாமல் அறிவியல் அறிஞர்கள் விழிக்கிறார்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களோடு இதனை ஆறாவது புலனாகச் சேர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த ஆறாவது புலன்பற்றி வேறு சில நாடுகளிலும் ஒரு சில குறிப்புகள் கிடைக்கின்றன. மிச்சிகன் நகரில் ஒரு பெண் தன் விரல்களால் பார்க்கும் திறமை பெற்றிருப்பதாக நியூயார்க்கில் உள்ள ஓர் உளவியல் அறிஞர் கூறுகிறார். இப்படிப்பட்ட திறமை நம்மில் எல்லாருக்குமே உண்டா, அல்லது ஒருசிலருக்குமட்டும்தானா என்பது பற்றிக் கண்டறிய, வாசிங்டனிலுள்ள தேசிய மனநல நிலையம் ஒன்றில் நூற்றுக்கணக்கான பேர்களை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

'உரோசா' என்ற உருசிய நாட்டுப் பெண்ணிடம் உள்ள இந்தத் திறமை நம்மில் பலருக்கும் உண்டு; ஏறத்தாழ ஆறில் ஒருவர் இந்தத் திறமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பது உருசிய நாட்டிலுள்ள அறிவியலாரின் கருத்து. இந்தத் திறமை உறக்க நிலையில் இருக்கிற தென்றும், பயிற்சியின்மூலம் இதை வளர்த்துக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இதுமட்டுமன்று, கால் கட்டை விரல் மூலமாகக்கூட பார்க்க முடியும் என்று உருசியர்கள் மார் தட்டுகிறார்கள். 'விரல்களால் பார்க்கும்' இத்தகைய திறமை இதுநாள் வரை எப்படி நமக்குத் தெரியாமல் இருந்தது? இதுபோல இன்னும் பல வியத்தகு திறமைகள் நம் உடலில் உள்ளனவா? அல்லது இது திடீர் என்று தோன்றும் ஒரு வகை உணர்வா?

இவை ஆராய்ச்சிக்குரியன. இதுபற்றிய ஆராய்ச்சி நமக்குப்பல சுவையான செய்திகளைத் தரக்கூடும். பார்வையானது, எந்த முறையில் எப்படித் தோன்றுகிறது என்ற நுணுக்கங்களைக் கண்டறிய இந்த ஆராய்ச்சி உதவி செய்யும். கண் எப்படி உருவங்களையும், நிறங்களையும் மூளைக்கு அனுப்புகின்றது என்பது பற்றிய விளக்கங்கள் இனி தெளிவாக விளக்கப்படலாம். கண் குருடாவதற்கான காரணங்கள், அதைப் போக்கிப் பார்வை உண்டாக்குவதற்கான தெளிவான வழிமுறைகள் ஆகியன இனி எளிதாகக் கண்டறியப்படலாம். ஏற்கனவே குருடாகியிருப்போருக்கு இனி ஒரு புதிய வாழ்வு தொடங்கக் கூடும். 'பிறவிக்குருடு' ஒரு பெரும் கொடுமையாக இனி நீடிக்காது என்றும் கூறமுடியும். அதற்கான வழியில் இன்று ஆய்வாளரின் எண்ணம் திரும்பியிருக்கிறது.

'உரோசா' என்ற உருசிய நாட்டு மங்கை, மிச்சிகன் நகரத்துப் பெண்–இவர்களின் 'விரல்களால் பார்க்கும்' திறமைக்கு ஏதேனும் காரணங்கள் இருக்கமுடியுமா? இதை முதலில் ஆராயவேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த 'உரோசா' 'நிசனிதாசில்' என்னுமிடத்தில் உள்ள ஒரு குருடர் பள்ளியில் பணியாற்றியிருக்கிறாள். ஆசியாவை ஐரோப்பாவிலிருந்து பிரிக்கும் 'யூரல்' பகுதியின் கிழக்கே இந்தப் பள்ளி இருக்கிறது. அங்கே, ஆறுவது புலனில் ஆர்வம்மிகுந்த வேறொருவரின் தூண்டுதலினால் 'உரோசா' தன் விரல்களால் படிக்க முயற்சி செய்தாள். பழக்கத்தின் காரணமாக அவள் இந்தத் திறமையை வளர்த்துக் கொண்டாள்.

அதற்குப்பிறகு ஒருமுறை அந்தப் பெண் ஒருவகை மூளை அழற்சி நோய்க்கு உள்ளானாள். [Encephalitis–an inflammation of the brain]. இந்த நோயிலிருந்து அவள் மீண்டாள். இதற்குப் பிறகு தான் அவளுடைய 'விரல் நோக்குத்திறமை' மேலும் நன்றாகப் பளிச்சிட்டது. ஆயினும், மூளை அழற்சி நோய்க்கும் இந்தத் திறமைக்கும் என்ன தொடர்பு என்பது இதுவரை எவருக்குமே புரியாத புதிராக விளங்குகின்றது. 'உரோசா'வின் பெயர் செய்தித்தாள்களில் எல்லாம் அடிபடத் தொடங்கியது. மிகக் குறுகிய காலத்தில் அவள் பெரும் புகழ் பெற்றாள். உருசிய நாட்டு உளவியல் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இவளைப்பற்றிக் கேள்விப்பட்டனர். உடனே அவர்கள் தங்கள் கழகத்தின் உறுப்பினர்களுக்கு இவளுடைய செய்கைகளைக் காட்ட வேண்டும் என்று விரும்பினார்கள். உரோசாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. **1962**-ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் ஒருநாள் மாலை நேரம் உளவியல் அறிஞர்கள் ஆவலோடு அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் 'உரோசா' அமர்ந்திருக்கிறாள். அவளுடைய கண்கள் நன்றாக மறைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அவளிடம் முதலில் ஒரு செய்தித்தாள் கொடுக்கப்படுகிறது. அவள் தன்னுடைய விரல்களை அந்தத் தாளின்மேல் தவழ விடுகின்றாள். அவளின் வாய் அசையத் தொடங்குகிறது. அவள் இப்போது செய்திகளை உரக்கப் படிக்கிறாள். பார்வையாளர்கள் கல்லாக அமர்ந்திருக்கிறார்கள். உளவியல் அறிஞர்கள் ஒருவேளை தங்களையே உளநோய் பற்றியிருக்குமோ என்று எண்ணத் தொடங்குகிறார்கள். செய்தித்தாளை அவள் படித்துமுடித்த பிறகு ஒரு நிழற்படத்தை அவளிடம் கொடுக்கிறார்கள். அந்தப்படத்தின் மேல் விரல்கள் தவழ்கின்றன, படத்திலுள்ள உருவத்தை அவள் தெளிவாக விளக்கிக் கூறுகிறாள். சோவியத் நாட்டு இதழ் ஒன்று ["U.S.S.R"] இந்த நிகழ்ச்சிகளை விளக்கி வெளியிட்டிருக்கிறது.

அதன் பிறகு அந்தப் பெண்ணிடம் வண்ணத்தாள்களின் துண்டுகள் போடப்பட்டுள்ள ஒரு கண்ணாடித் தாள் உறை ஒன்று கொடுக்கப்படுகிறது. அவள் தொட்டுப்பார்த்து வண்ணங்களைக் கூறுகிறாள். அடுத்தபடியாக,ஒரு பைக்குள் பல வண்ணங்களில் நூல் கண்டுகளைப் போட்டு அவளிடம் கொடுக்கிறார்கள். அவள் அதை வாங்கி தன் கையைப் பையின் உள்ளே விடுகிறாள், பார்வையாளர்கள் கேட்கின்ற வண்ணத்தில் நூல் கண்டுகளை எடுத்துத் தருகிறாள். இதுபோலவே,

விரல்களால் பார்த்துக் கேட்கப்படும் சீட்டுகளை, சீட்டுக்கட்டிலிருந்து எடுத்துத் தருகிறாள். அஞ்சல் தலைகளைத் தடவிப்பார்த்துப் படங்களைக் கூறிவிடுகிறாள்.

1962-ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் 'உரோசா' அறிவியற் கழகத்தை அடைந்தபோது தன்னிடமுள்ள திறமையை அங்குள்ளவர்களுக்கு விளக்கிக்கூற அவளால் முடியவில்லை. உருவங்கள் உள்ள இடங்களைத் தொடும்போது அலைபோன்ற வரிகளில் புள்ளிகள், குறுக்குக்கோடுகள், வடிவங்கள் ஆகியவற்றை உணர்வதாக அவள் கூறுகிறாள். அதேநேரத்தில் அவளுடைய மனம் வண்ணங்களை உணர்ந்து கொள்வதாகவும் கூறுகிறாள். வியப்பிலே மூழ்கிய அறிஞர்கள் தங்களால் இயன்ற பலப்பல ஆய்வுகள் எல்லாம் செய்து பார்த்துத் திகைத்தபின்பு இறுதியாக வெளியிட்ட முடிவு: "உரோசா தன்னுடைய விரல்களில் உள்ள தோலில் பார்வை உறுப்புகளைப் (organs of vision) பெற்றிருக்கிறாள்,"

மேற்கூறிய முடிவுக்கு வருமுன் ஆய்வாளர்கள் மூன்று வகையாகக் கருத்துக்களை வெளியிட்டார்கள். இலெனின்கிராடு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் இலியோநிட் வாசிலிவ் (Prefessor Leonid vasiliev) என்பவர் இந்த 'விரல்வழிப் பார்வை'க்குக் காரணமாக சிறப்பான புலன் உணர்வு என்ற ஒரு கொள்கையைக் கூறினார். (E S P = Extra Sensory Perception) இந்தத் துறை பற்றி இது வரை நமக்கு மிகக் குறைவாகவே தெரிந்திருப்பதால், மேற்கூறிய உண்மையை மெய்ப்பிக்கவோ அல்லது பொய்ப்பிக்கவோ முடியாத நிலை ஏற்படுகிறது.

மாசுக்கோ பல்கலைக் கழகத்தில் உள்ள உளவியல் விரிவுரையாளர் 'கால்பெரின்' (Pyotr Galperin)கூறுவது: "உரோசா, உலகில் மற்ற எல்லாருக்கும் உள்ள ஒரு புலன் திறமையால் இந்தப் 'பார்வை' யைப் பெற்றிருக்கவில்லை. அவள், தனித்த சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ள மிக மென்மையான ஒருவகைத் தொடு உணர்வைப் பெற்றிருக்கிறாள்." (Extraordinarily developed and refined touch.)

கார்கோவ் (Kharkov) பல்கலைக் கழகத்தில் உள்ள உளவியல் அறிஞர் நெவல்சுகி (Pyotr Nevelsky) வேறொரு கொள்கையை வெளியிடுகிறார். "விரல் நுனிகளில் படுகின்ற பொருள்களின் மேற்

பரப்பிலிருந்து வெளிப்படுகின்ற கண்களுக்குப் புலப்படாத ஒருவகைச் செங்கதிர்கள்'' தாம் இத் திறமைக்குக் காரணம். ('Possibility of invisible infra-red rays reflected from the surface of the substance acting on the finger tips.'')

மேற்கூறிய பலவகைக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு 'உரோசா' மேலும் பலதிறப்பட்ட ஆராய்ச்சிகட்கு உள்ளாஞள். 'உரோசா'வின் திறமைக்கு எழுத்துகளின் மேற்பரப்பின் தன்மை (சொர சொரப்பு) அல்லது ஒருவகை வெப்பம் அல்லது நிறம் காரணமாக இருக்குமா? இதற்கு விடைகாண சில ஆய்வுகள் செய்யப்பட்டன.

மேற்பரப்பு நன்ருக மென்மைப் படுத்தப்பட்ட ஒரு கண்ணுடித் திரையில் வண்ணப்படங்களை திரையிட்டு, அதை விரல்களால் பார்க்கும்படி கூறிஞர்கள். அவள் அதை எவ்வகைக் குழப்பமுமில்லாமல் பார்த்துக் கூறிஞள். ஒளியையும் இருளையும் பிரித்தறிவதில் அவள் எவ்வகைத் தொல்லேக்கும் உள்ளாகவில்லே.

பிறகு ஒளிவண்ணக்கருவி (Spectroanomaloscope) ஒன்றைக் கொண்டு வந்தார்கள். இந்தக் கருவியில் ஒரு பார்வைக் கண்ணுடி (eye piece) பொருத்தப்பட்டிருக்கும். இதன் மூலமாக சிவப்பு முதல் ஊதா வரை எல்லா வண்ணங்களையும் பார்க்கமுடியும். 'உரோசா' பார்வைக் கண்ணுடியில் கண்களை வைத்து நோக்குவதற்குப் பதிலாக விரல்களை வைத்து நோக்கிஞள். இதிலும் அவளுக்கே வெற்றி கிடைத்தது. அவள் எல்லா வண்ணங்களையும் அடையாளம் காட்டிஞள். இந்த ஆய்வைப் பேராசிரியர் ஏபிம் ராப்கின் ((Professor Yefim Rabkin) என்பவர் நடத்திஞர்.

மேற்கூறிய ஆய்வுகளால் 'சிறப்பான ஒருவகைத் தொடு உணர்வு' (Special sense of touch) என்ற கொள்கை மறுத்து ஒதுக்கப்பட்டு விட்டது. வடிவங்களின் வெண்மை, கருமைப் பகுதிகளிலிருந்து எழும் மிகக் குறைந்த வெப்பநிலே வேறுபாட்டால் அவள் உணர்கிருள் என்ற கொள்கையைக் கீழ்க்கண்ட வகையில் ஆய்வு செய்யப்பட்டது. திரைக்கும் ஒளி செலுத்தப்படும் இடத்திற்கும் இடையில் ஒரு 'சிவப்பு வடிகட்டி' (Infra-red filter) வைக்கப்பட்டது. இந்த வடிகட்டி மூலமாக ஒளி செல்லும். ஆனுல் வெப்பக் கதிர்கள் தடுக்கப்பட்டுவிடும். இதிலும் உரோசாவுக்கே வெற்றி. இந்த ஆய்விலும்

அவளுக்கு எவ்வகைத் தடுமாற்றமும் ஏற்படவில்லை. அடுத்த முயற்சியாக, இன்னொரு வடிகட்டியைப் பயன்படுத்தினர். இது வெப்பத்தை அனுப்பும்; ஒளியை அனுப்பாமல் தடுத்துவிடும். இந்த ஆய்வில் உரோசாவினால் வெப்பவேறு பாட்டை உணர முடியவில்லை. அவளால் வெண்மை, கருமை இவற்றை மட்டுமே பிரித்தறிய முடிகிறது.

வேறொரு 'விரல்விழி மங்கை'யைப்பற்றிய கதையைப் பண்டாரகர்-இரிச்சர்டு யூட்சு (Dr. Richard P. Youtz) என்பவர் கூறுகிறார். இவர் நியூயார்க்கில் உள்ள பர்னார்டு கல்லூரியில் (Barnard college) உளவியல் பேராசிரியர். இவர் ஒரு நாள் ஓய்வு அறையில் நண்பர்களுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். ஒரு பெண் அப்போது கூறிய கதை இவரை வியப்புக்குள்ளாக்கியது. அந்தப்பெண் ஒருமுறை ஓர் உயர்நிலைப்பள்ளியில் பாடம் சொல்லிக் கொண்டிருந்தாளாம். அப்போது மற்றோர் ஆசிரியர் ஒரு மாணவியின் திறமையைப் பற்றிக் கூறினாராம். பட்ரீசியா இன்சுவர்த் (Patricia Ainsworth) என்பது அந்த மாணவியின் பெயர்.

அந்த மாணவி கண்களைக்கட்டிக்கொண்டு பொருள்களை நன்றாக அடையாளம் காட்டுகிறாள். நிறங்களையும் கூறுகிறாள். இது நடந்தது 1939-இல் பர். யூட்சு (Dr. Youtz) நீண்ட நாட்களுக்குப்பிறகு ஒரு நாள் மாணவி பட்ரீசியாவைக் கண்டார். அப்போது பட்ரீசியா மாணவியாக இருக்கவில்லை, அவள் மணமாகி நான்கு ஆண் பிள்ளைகளுக்குத் தாயாக இருந்தாள். பர். யூட்சு அவள் திறமையை ஆய்ந்தார். அவளைப்பற்றிக் கூறப்பட்டவை யாவும் உண்மையே. அவளுக்கு இன்னமும் அந்தத் திறமை இருக்கிறது என்பதை உணர்ந்தார்.

அதற்குப்பிறகு ஓர் ஆகஃச்டு திங்களில் இந்த உளவியல் அறிஞர் 'பட்ரீசியா'வைத் தேடிச் சென்றார். அந்தப் பெண்ணின் திறமை குறித்துப் பலவகையான ஆய்வுகள் செய்தார். மொத்தம் அறுபது மணி நேரத்தை அங்கே கழித்தார். ஒரு கரிய, ஒளி புகமுடியாத பெட்டியை எடுத்துக்கொண்டார். அந்தப் பெட்டிக்குள் சிவப்பு, பச்சை, நீலம், வெள்ளை, மஞ்சள், கருஞ்சிவப்பு(purple), கருப்பு ஆகிய வண்ணங்களில், ஒவ்வொரு நிறத்திலும் இரண்டு மேனி மொத்தம் 14 துணித் துண்டுகளைப் போட்டார். அவை நன்றாகக் கலக்கப்பட்டன. பிறகு 'பட்ரீசியா'வை அந்த வண்ணத் துண்டுகளை ஒவ்வொன்றாய் எடுத்து அடையாளம் காட்டும்படி கூறினர்.

இந்த ஆய்வு கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சான் லென்ட்சு (John Lentz), பர். தோனல்டு (Dr. Donald De Greaf) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மூன்று தடவைகள் நடந்த ஆய்வுகளில் அவள், மொத்தம் 14 வண்ணத் துண்டுகளில் 11, 13, 12 என்ற எண்ணிக்கையில் சரியாகத் தேர்ந்தெடுத்து வெற்றி பெற்றாள்.

பட்ரீசியா என்ற இந்த மிச்சிகன் மங்கையின் செயல் அவர்களை வியப்படையச் செய்ததில் வியப்பொன்றுமில்லை. இவளால் வண்ணங்களைக் கூற முடிகிறதே தவிர எழுத்துகளைப் படிக்க முடியவில்லை. அடித்தபடியாக பர். ஊட்சு இன்னொரு தேர்வை நடத்தினர். வண்ணத் துணிகளைக் கண்ணாடி(அல்லது)நெகிழி ஏடுகளால் மூடி அதன்மேல் விரல்களால் தடவிப்பார்த்துக் கூறும்படி பணித்தார். கண்ணாடி ஏட்டின் கனம் 16/1 விரற்கிடையாக இருக்கும் வரையில் அந்தப் பெண் கூறியவை சரியாக இருந்தன. "வெளிரிய நிறங்களை மென்மையாகவும், கரிய நிறங்களைக் கடுமையாகவும் உணர்கிறேன்'' என்று சொல்லுகிறாள் அந்த மங்கை. மேலும் அவள், "சிவப்பு, நீலம், பச்சை இவற்றைச் சிவப்பு, நீலம், பச்சையாகவே உணர்கிறேன்,'' எனகிறாள்.

இதற்குப்பிறகு கொஞ்ச காலம் கழித்து பர் யூட்சு. நியூயார்க்கில் பர்னார்டு கல்லூரி மாணவர்களை ஆய்வு செய்யத் தொடங்கினார். தொடக்க நிலையில் இவர் ஒரு முடிவை வெளியிட்டார். அதன்படி '135 மாணவர்களில் 5 முதல் 15 விழுக்காடு வரை இந்தத் திறமையைப் பெற்றிருக்கிறார்கள,' என்றார். உருசிய நாட்டின் அறிவியலார் கூறும் 'ஆறில் ஒருவர்' (17 விழுக்காடு) என்ற கொள்கையும் ஏறத்தாழ இதற்குச் சார்புடையதாகவே அமைகிறது.

பர். ஊட்சு அதன் பிறகு ஒரு சிக்கலுக்குள்ளானார். ஒரு சனவரி மாதத்தில் அவர் 'பட்ரீசியா'விடம் சென்றார். இரண்டாவது முறையாக ஆய்வு செய்ய எண்ணி அவர் அங்கே சென்றார். ஆனால் அப்போது அந்தப் பெண்ணால் எதையுமே சரியாகக் கூறமுடியவில்லை. எல்லாவகையான தேர்வுகளிலும் அவள் தோல்வியே கண்டாள். பர். ஊட்சு இதை ஒரு பெரும் தோல்வியாகவே கருதினார். "ஏதோ சில சூழ்நிலைகள் அவளின் திறமைக்கு இடையூறாய் அமைந்திருக்க வேண்டும். அஃது ஒருவேளை கோடைக்காலம்—குளிர்காலம் என்ற வெப்பநிலை வேறுபாடுகளால் நேரிட்டிருக்கலாம். அதை நான் கண்டு பிடித்தாக வேண்டும்.'' என்று கூறுகிறார் பர். ஊட்சு. [வளரும்]

யாது. இஃதுண்மை! தமிழுக்கும்–தமிழ்க் குமுகாயத்திற்கும் நல்லது நல்கி–அல்லது அகற்றி நாடுவாழ உய்விப்பவர்களைத்தாங்கள் உயர்த்துகிறீர்–ஊக்கப்படுத்துகிறீர். இதிலென்ன தவறு? மேலும் அவர்கள் கடமையினின்று தவறாதிருக்க வழி சொல்கிறீர்–வரம்பையும் வகுக்குறீர். தமிழினுக்கும்–தமிழகத்திற்கும் ஊறுவிளைக்கும் எந்தத் தாள்களையும்–எந்தக் குமுகாயத்தையும்–தனிமாந்தனையும் தலைதுனியச் செய்யும் செயலை இப்போதுபோல் எப்போதும் நிலை நிறுத்தி, தனி நிலையில்–நடுநிலையில் இருந்து, தென்மொழி ஆசிரியர் எவரையும் நந்தாமல்–எவருக்கும் நடுக்குறாமல் அவர் தம்பணியைச் செவ்வனே ஆற்றுவாராயின், தென்மொழி புகழ் மங்கா–மறையா; குன்றா–குறையா. இஃது உறுதி! **தென்மொழித் தமிழன்பன், நந்தம்பாக்கம், சென்னை-16.**

☐ அன்புத்தமிழ் மணமும்–ஆக்கமும்–ஊக்கமும் கொண்ட ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு! வயவ! இக்கன்னி இதழ் எங்களுக்கு எல்லாம் ஒரு கலங்கரை விளக்கமாய் அமைந்துவிட்டது. இத்திங்கள் தென்மொழி ஆசிரியவுரை துலாக்கோல் போல் நின்று, அறம் வழங்கியுள்ளது. நடுவண் அரசு இனிமேலாவது இந்தித் திணிப்பைப் பற்றியும் தென்மொழிக் கொள்கையைப் பற்றியும் எண்ணட்டும்! தங்களின் மன உறுதியையும், ஊக்கத்தையும், அஞ்சாமையையும் போற்றுகின்றேன்! வாழ்த்துகின்றேன்! என்–வணங்குகின்றேன்!.! அடுத்துத் தென்மொழியில் வந்த, திரு.மணிவேலன் அவர்களின் ''பெண்மை எங்கே'' வென்றுவிட்டது. தென்மொழிக்கு அஃது ஒரு முகடுபோல் சிறப்புச் செய்துவிட்டது. தமிழ்ப் பெண்டிர் இனிமேலாவது திருந்தட்டும். திரு. மணிவேலன் அவர்கட்கு என் தமிழ் நெஞ்சம் கலந்த வணக்கம் பல. இதுபோன்ற படைப்புகளைத் திங்கள் தோரும் படைக்கட்டும்! அஃது எங்களைப் போன்றவர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டட்டும். புதுப் பாதையைக் காட்டட்டும்! தவத்திரு. மறைமலை அடிகள் அவர்களும், தமிழ் தென்றல் திரு. வி.க.வும், பாவேந்தர் அவர்களும் விட்டுச்சென்ற தமிழ்த் திருப்பணியைத் தென்மொழி தொடங்கியுள்ளது – அப்பணி சிறக்க மொழி வளரத் தமிழ் அன்னையின் தாள் பணிகின்றேன்.

–க.க. ஆறுமுகம், கருக்கம்பாளையம், அவனுசி.

☐ பேரன்பும் அறிவும் சால் ஐயா அவர்களுக்கு! யான் ஒரு கல்லூரி மாணவன்; 'தென்மொழி'பால் பற்று மிகக் கொண்டு மூன்று ஆண்டுகளாய்த் தொடர்ந்து வாங்கிவருபவன்; எவர்க்கும் அஞ்சாது, நடுநிலை பிறழாமல், நேர்மை, முறை, அறம் என்பவற்றையே துணையாகக் கொண்டு, தென்மொழிக்குப் பாடுபடும் தங்கள் தொண்டு கண்டு உளம் சிலிர்த்து, வியந்து வியந்து, தங்கட்கு ஒன்னார் தரும் இடர்ப்பாடு கண்டு கலங்குபவன். தங்களுடன் தொடர்பு கொள்ளும் பேராவல் மிக்கவன். யான் தங்கள் எழுத்துகளால், பொய்மை களைந்து மெய் வழியில் சென்று கொண்டிருக்கின்றேன். என்னை மெய்யாற்றுப்படுத்திய தங்களுக்கு என் நன்றியைச் சொல்லளவிலேதான் தெரிவித்துக் கொள்ள என்னால் முடிகின்றது. அதற்காகப் பெரிதும் வருந்துகின்றேன். பொருள் பெற்ற செல்வனாய் நானிருந்தால், 'தென்மொழி'யினை நாடெங்கும் என் செலவிலேயே பரப்புவேன். இறைவன் விருப்பு அவ்வாறு இல்லை. என் செய்வல் யான்? **'தென்மொழித்'தொண்டன்,**

ச. சண்முகன், பேட்டைவாய்த்தலை, திருச்சிமா .வ.

△ 'தென்மொழி'யில் தொடர்ந்து சுவைதந்த தேனடை!

△ நூல் வடிவில் வெளிவருகிறது!!

O மெய்ம்மைக் காதலுக் கேங்கிய
பேதைப் பெண் ஒருத்தியின் நெஞ்ச ஓவியம்!

O வாய்மைக் காதல் வாயாவிடத்து – அதனைத்
தாய்மையாய்க் கனிவித்துக் கொண்ட,
தூய நெஞ்சின் துயர மாமழை!

O காதல் நுகராக் கன்னி இளமான்!
மாதர் தெய்வம்! மங்கையர் விளக்கம்!

துரை - மாணிக்கம்

எழுதிய

இனிய தனித்தமிழ்ப் பாவியம்!

O அழகிய மூவண்ண அட்டை!

O விலை ஓர் உருபா.

O விற்பனையாளர்க்கு 10 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.

O தேவைக்கு முன்கூட்டியே எழுதுங்கள்.

O அஞ்சலில் தனியிதழ் வேண்டுவோர் உருபா 1-25 விடுக்க.

விளக்கங்களுக்கு:-

தென்மொழி

கடலூர்-க.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.